சிவமயம்

குமரகுருபரன்



மலர் 16]   1965௵ மார்கழி 1-ம் ௳ (16-12-65)   [இதழ் 1

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்,
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஒய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை 19 ... 601
2. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம்.
(Tirumantiram Tantra the fifth) ... 605
3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்—உரைநடை 609
4. திருவருட் பிரகாச வள்ளலாரென்னும்—
சிதம்பர இராமலிங்க சற்குரு வெண்பா வந்தாதி... 612
5. செய்யுட் கோயில் ... 613
6. He in three Roles 617
7. இரவாத நிலை ... 621
8. Hymns of the Tamil Saivite Saints ... 627
9. பகழிக் கூத்தர் ... 628
10. ஒன்று வேண்டும் 632
11. வான்முகில் வழாது பெய்க! ... 633
12. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப்
பதிகங்கள் 639
13. திருவாசக அநுபூதி உரை ... 641
14. தோடுடைய செவியன் 642
15. The Rajah of Ramnad Memorial Feeding

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 16 || விசுவாவசுஸு மார்கழித் திங்கள் 1ம்வ [16-12-65] || இதழ் 12

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 19)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

இன்றளிர்க்கைக் கிள்ளைக்கே யிர்ங்குதலை கற்பிக்கும்
பொன்றளிர்த்த காமர்ப் பொலங்கொம்பு—மன்றவர்தம்
பாகத் திருந்தாள் பதுமத்தாள் பாவித்தாள்
ஆகத் திருந்தா ளலள்.

இவ்வெண்பாவில் ஈற்றசையாக நின்றது 'அலள்' என்றது. அதனை 'அவள்' என்று பிழையுறக் கொண்டதும் அதற்கு ஏற்ப உரைத்ததும் பொருந்தாதன. கழகப்பதிப்பாக வெளிவந்ததில் இருமொழிப் புலவர் சிதம்பர ராமலிங்கப் பிள்ளை கொண்டு

பொருளுரைத்த பாடமே இதிற்காணப்படுவது. அவர் எழுதிய குறிப்புரையே பொருத்தமுடையது. இனிய தளிர்போலும் கையில் ஏந்திக்கொள்ளும் பேறு வாய்த்த கிளிக்கே ஈரிய குதலை மொழி கற்பித்தருளும் பொன் தளிர்த்த அழகையுடைய பொலங் கொம்பு (ஹேமலதா) ஆகிய சிவகாம வல்லியம்மையார் தில்லை நடராசப் பெருமானுரது இடப்பால் இருந்தார். அவரது தாமரை மலர்போலும் திருவடியைத் திரிகரண சுத்தியோடு மனத்திற் பாவித்தும் வாக்கினுல் துதித்தும் காயத்தால் பணிந்தும் வரம் பெற்றவளாய், அப்பெருமாட்டியாரைப் போலத் தானும் தன் கணவனது எழிலுடம்பிற் செம்பாதி கொண்டிருக்கும் பேறு பெற்ருள் அல்லள் என்பது இதன் பொருள். ஈரடியிலும் 'இருந் தாள்' என்றே கொள்வது சிறவாமையின், ஷி பிள்ளையின் குறிப்புரையில் 'இருந்து ஆள்' எனப் பிரித்துப் பொருள் எழுதப் பட்டது. அது மிக்கப் பொருத்தமானதே. அப்பொருள்:- பாகத்து இருந்து ஆளப்பெற்ற பதுமத்தாள் என்பது. நாலாவதடியில் இருந்தாள் என்றே கொள்ளலாயிற்று. ஆள் பதுமத்தாள் என்பது செயப்பாட்டுவினையிற் பொருள் கொள்ளற்பாலது. ஆளும் பதுமத்தாளாகாள். ஆளப்படும் பதுமத்தாளே. கொம்பு ஆண்டாள். பதுமத்தாள் ஆட்கொள்ளப் பட்டாள். பாவித் தாள் - கருதினுள்.

'உமாதேவியார் போன்று தானும் தன் கணவனுரது ஆகத்திலிருக்க வேண்டும் என்று கருதினுள். (கழகப் பதிப்பில் உள்ள உரை இது. மிகச் சிறந்தது). இருந்தாளலள் - அஃது அத்திருமகட்கு எய்தாத பேருயிற்று அதனுல், அப்பாவனைப் படி திருமால் ஆகத்தில் இருந்தாள் அல்லள். இங்கு அவள்' என்று கொண்ட பாடம் பிழையுற்றதே. 'காமர்ப் பொலிக் கொம்பு' என்று வல்லெழுத்து மிக்கபாடம் சிறந்தது. கொம்பு இருந்து ஆள் பதுமத்தாள் என்று இயைத்துக் கொள்க. கொம்பு கொடி என்ற பொருளில் ஆளப்பட்டது. ஹேமலதா என்றதன் நேர்மொழி பெயர்ப்பு, பொற்கொடி என்பதே. பொலங் கொம்பு என்றதும் அப்பொருட்டே. பொன்மரத்திற் பொற்கொம்பு எனல் பொருந்துவதன்று. கொள்பு என்றது கொம்பு என மருவிற்று, 'கொள் கொம்பு' என்ற வழக்காலும் அது புலனுகும்.

கொள் கொம்பு கொளு கொம்பு என்றாகிப் பின் கொழு கொம்பு என்று திரிந்தது. மன்றவர்தம் ஆகத்து இருந்து ஆள்(கின்ற) பதுமத்(தைப் போன்ற) தாளைப் பாவித்தா(ளாகிய திருமக)ள், ஆகத்து இருந்தாள் அல்லள் எனலும் ஆம். (17)

"அல்லிக் கமலத் துணைத்தாள தென்றும்என் ஆவிக்குள்ளே
புல்லிக் கிடந்தது போலும்கெட் டேன்புன் மலக்கிழங்கைக்
கல்லிப் புலக்களை கட்டருள் பூத்துட் கனிந்தமலை
வல்லிக் கிலைகொல் மருங்கென் றிரங்கும் மறைச்சிலம்பே"

இப்பாட்டிற் கிடக்குஞ் சிலசொல் திருவாசகத்தில் இம் முதல் கொண்டு தொடங்கும் திருப்பாடலை நினைப்பிக்கும்.

இதில் எழுவாய் மறைச் சிலம்பு. பயனிலைகள் தாளது, கிடந்தது என்னும் இரண்டுமாம். ஆயினும், கிடந்ததுபோலும் கெட்டேன் என்றிருத்தலால் 'யான்' தோன்றா எழுவாய், 'கெட்டேன்' பயனிலை எனக் கொள்ளல் வேண்டும்.

மறை (வேதம்) ஆகிய சிலம்பு இரங்கும் (ஒலிக்கும்). என்னென்று ஒலிக்கும்? வல்லிக்கு மருங்கு இலையோ என்று இரங்கும். அத்தகு மறைச் சிலம்பு, கமலத்தாளது. என் ஆவிக்கு உள்ளே புல்லிக் கிடந்தது. அக்கமலம் அகவிதழ் உடையது. அல்லி – அகவிதழ். அல்லிக் கமலம் – அகவிதழ்களையுடைய தாமரை. கமலத்தாள்–தாமரை மலர் போலும் செய்ய திருவடி. துணைத்தாள்–இருதாள். துணைமை + இருமை + இணைமை மூன்றும் ஒரு பொருளில் ஆளப்படுகின்றன. அவற்றின் தனித் தனிப் பொருள் வேறு. இரண்டனுள் ஒன்றற்கொன்று துணையாந் தன்மையைத் துணைமை என்றும் இரண்டாயிருக்குந் தன்மையை இருமை என்றும் இரண்டும் இணைந்திருக்குந் தன்மையை இணைமையென்றும் முன்னோர் கொண்டனர். பின்னோர் இவற்றின் வேறுபாடு கருதாது வழங்கினர். இராம லக்குமணரும் பரத சத்துருக்கனரும் துணைமை வழுவாதவர். 'இருமை வகை தெரிந்தீண்டறம் பூண்டார்' 'வெண்மருப்பால் ஈதொன்றடுகளி றென்றெதிர் பாய்ந்த இணைச்சுவடே' (திருவாரூர் நான்மணிமாலை, 7) என்பவற்றால் அறிக.

மலைவல்லி—பரமேச்சுவரி. இமாசல மன்னனுக்குக் குமாரியாகத் தோன்றிய உமாதேவியையே மலைவல்லி, மலைமகள் என்பர். அவ்வல்லி உள்ளே கனிந்தது. அருள் பூத்தது. களையைக் களைத்தது. ஏது களை? அடியவர்களைப் பற்றிப் போகாதிருந்த புலங்களாகிய களை. அப்புலக்களையைக் களைய வேண்டின், மலக் கிழங்கைக் கல்லிப் பெயர்த்தெறிதல் வேண்டும். அம்மலம் கொடுமையாற் பெரிது. தன்மையாற் சிறிது. புன்மலம். 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கு'ம் அம்மையே. இதனாலும் இம்மாலையைக் குமரகுருபரரே இயற்றினார் என்பது புலனாகும். 'கெட்டேன்' என்னும் வழக்கு இவர் வாக்கில் பல இடத்திற் காணப்படுகிறது. 113, 189, 460 ஆம் பாக்களிற் காண்க.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாததொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.
தருமபுரம், மாயூரம் P. O.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 11-ன் தொடர்ச்சி

But the Saruba State may be reached through the Path of Love as well.

ஆனால் சாருப நிலையை சரியை நெறியாலும் அடையலாகும்.

93. சயில லோகத்தினைச் சார்ந்த பொழுதே
சயில மதாகும் சராசரம் போலப்
பயிலும் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவன் கதிர் வடிவாமே.

All things, living and non - living
As they reacheth the Golden Mount of Meru
Art themselves into gold transformed;
Even so,
They that reacheth the world of the Master Divine
Attaineth the form light Divine
His, of the King Kailas.

மேருவைச் சார்ந்த எல்லாப் படைப்பும் – நெகிழ்வனவும் அல்லாதனவும் – பொன்மயமாவது போல, உபதேசித்தருளும் குருவடிவாக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் உலகத்தை (சாலோகம்) அடைந்த பொழுதே, அவ்வாறு அடைந்தவர்கள் கயிலைக் கடவுளின் ஒளி உருவைப் பெறுகின்றார்கள்.

குறிப்பு: யோகத்தால் சாருபம் கூடும் என்றாலும், யோகத்தில் ஞானத்தாலேயே கூடும் என்றார் முன் பாட்டில. ஆனால் சரியையில் நிற்போருக்கும் அது சாலோக வழியால கூடலாகும் என்றார். இது 89-வது பாட்டின் கருத்தை வற்புறுத்தியது.

The Stages in the Souls' Journey along the Path of Saivam.

சிவநெறியில் சீவனின் பயண நிலைகள்

94. சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்;
சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்;
சைவம் சிவம் தன்னைச்சாராமல் நீங்குதல்;
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே.

In the Souls' Journey towards God
The Path of Saivam describeth stages four;
It is Saivam, when the self forgeth a kindred tie with Siva;
It is the path self-same, when the soul knoweth itself and neareth God;
It is Saivam too, when it loseth itself and vanishes in Siva;
It is Saivam too when it enjoyeth the finale bliss of Sivananda,
The inextricable union in Sayujya.

சைவ நெறிப் பயிற்சியின் முதற்படி சீவன் சிவனோடு அன்பால் தொடர்பு கொள்வது (சாலோகம்); பின் ஆன்மா தன்னையுணர்ந்து சிவத்தை அணுகுதல் (சாமீபம்); அடுத்து, தன்னைத் துறந்து சிவத்திலே மறைதல் (சாருபம்); இறுதியாக, இரண்டற்ற நிலையில் சிவானந்தத்து அழுந்தல் (சாயுச்சியம்).

குறிப்பு:

வரி: 3. 'தன்னைச் சாராமல் சிவம் நீங்குதல்' என்று கூட்டவும். சிவம் நீங்குதல் — சிவத்திடம் தன்னை நீக்குதல் அல்லது அழித்தல்.

Sayujya or the Finale Bliss Defined.

சாயுச்சியம் இன்னவென்றல்.

95. சாயுச்சியம் சாக்கிராதீதம் சாருதல்;
சாயுச்சியம் உபசாந்தத்துத் தங்குதல்;
சாயுச்சியம் சிவமாதல்; முடிவிலாச்
சாயுச்சியம் மனத்து ஆனந்த சத்தியே.

Sayujya is to the state of Jagra-athitha-the Beyond - Consciousness
Sayujya is to abide for ever in Upasantha the peace that knoweth no understanding
Sayujya is to become Siva Himself
Sayujya is to experience the infinite power of inward bliss for ever and ever.

சாயுச்சிய நிலை எனப்படுவது மேலாலவத்தையில் சாக்கிராதீதத்தை அடைதல்; உபசாந்தத்தில் தங்குதல்; சிவமே ஆதல்; எல்லையற்ற பேரானந்தத்தைத் துய்க்கும் ஆற்றலைப் பெறுதல்.

குறிப்பு:

வரி: 1. சாககிராதீதம் என்பதற்கு "மருவுபசுகரணங்கள் சிவ கரணமாகத் துன்னிய சாக்கிரம் தனிற்றுரியாதீதம்" என்றார் சிவஞானசிததியார் சுபக்கம் சூததிரம் 8. அதிகாரம 2. பாட்டு 34. மேலும்,

"சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்களுலகிற்
சருவசஙக நிவிர்த்தி வநத தபோதனர்கள்"

என்ற 35-வது பாட்டையும பார்க்க,

The Wooing of the Soul by the Lady of Grace or Arul Sakti.

ஆன்மாவை அருட்சத்தி வேட்டல்

96. இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம் புரிந்தாளே.

In the Corner dark of the Primal Stuff Chamber
There SHE was – the virgin Lady of Grace;
Intent on consorting with the Blind Old Man –
the Soul immortal.

She rent his veil of night,
Showered full many a favour,
Wooed with temptations diverse,
And lo! to her bosom took him,
In wedlock holy.

கேவலாதீத நிலையில் என்றும் கன்னியாயிருக்கும் மாயை என்னும் அருட்சத்தி, ஆணவ மலத்தில் ஞானக் கண்ணிழந்து நின்ற ஆன்மாவை உய்விக்கும் பொருட்டு, அவ்வான்மாவின் அஞ்ஞானத்தைப் போக்கி, அவனுக்கு இனியன பல செய்து, பேரின்பத்திலே விருப்பம் பெருகச் செய்து, அருளால் அவனைத் தழுவிக் கொண்டனள்.

குறிப்பு:

வரி: 1. குமரி – "அகிலாண்ட கோடியீன்ற அன்னையே, பின்னையும் கன்னியென மறை பேசும் ஆனந்தமயிலே" என்றார் தாயுமானவரும்–

மலைவளர் காதலி – பா. 5.

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 11-ன் தொடர்ச்சி)

சோலைப் புறமுப் புடைக்கனிகள்
தூக்கு முடத்தெங் கிமையவர்தம்
தோன்றல் திருவோ லக்கத்துத்
தோகை மயிலி னடங்குயிற்றும்
ஏலக் கருங்கொந் தளவளகத்
திளமா தருக்கு முதிர்வேனில்
இளைப்பாற் றுதற்குத் தாற்றெடுஞ்செவ்
விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த
காலப் புயலின் முகந்துடைக்கும்
கமுகு பழுக்காய்ப் பவழமுடன்
கதிர்முத் திட்டுச் செழும்பாளைக்
கற்றைக் கவரி புடையிரட்டும்
மாலைப் பழனப் பருதிபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. 26

சோலைப் புறங்களில், தென்னம்பழங்களைத் தூக்கிக் கொண்டிருக்கின்ற வளைந்த தென்னை மரங்கள், இமையவர் தலைவனுகிய இந்திரனது அத்தாணி மண்டபத்தில், தோகையை யுடைய மயில்களைப்போல நடனமாடுகின்ற மயிர்ச் சாந்து பூசிய கரிய கற்றையாகிய கூந்தலையுடைய இளமையான தேவ மங்கையருக்கு, முதிர்ந்த வேனிற் பருவத்துக் களைப்பை நீக்குவதற்குக் குலையோடு செவ்விள நீரைக் கொடுக்கக் கரு வுயிர்த்தலால் வருந்திய கார்காலத்து மேகத்தின் முகத்தைத்

துடைக்கின்ற கமுகமரங்கள், பழுக்காயாகிய பவழத்தோடு பாளையிலுள்ள ஒளிவீசுகின்ற பூவரும்புகளாகிய முத்துக்களை யிட்டுச் செழுமையான பாளையாகிய கற்றைக் கவரியைப் பக்கங் களில் வீசுகின்ற வரிசையான வயல்கள் நிறைந்த பகுதிபுரியின் வாழ்வே! தாலோ தாலேலோ! மலைமகளாகிய பார்வதி தேவியின் மணிவயிறு வாய்த்த முழுமணியே! தாலோ தாலேலோ!

மாலி மயத்து மடப்பிடி பெற்று
வளர்த்த விளங்களிறே
மழவிடை யேதிரு மாமடி கட்கென
வைத்த கவுத்துவமே
மூல மெனக்குல நான்மறை யோலிடு
முழுமுத லேமுவா
முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி
முத்திக் கொருவித்தே
காலை யிளங்கதி ருக்கெதிர் முதிரும்
கதிர்செம் பவழமுடன்
கதிர்முத் திட்டுவ ணங்கக் கன்னல்கொல்
கமுகுகொ லெனவளரும்
சாலி வயற்றமிழ் வேளூ ரடிகேள்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ. 27

பெரிய இமயமலையில் தோன்றிய இளம்பிடி போன்ற பார்வதி யம்மை பெற்று வளர்த்த இளங்களிறே! இளமையான ஆனேறே! திருமாலுக்கென்று வைத்த கவுத்துவமணியே! மூலப் பொரு ளென்று நான்கு வேதக் கூட்டங்களும் ஓலமிடுகின்ற முழு முதற் பொருளே! எந்த நாளிலும் மூப்பை யடையாத முக்கட் கனியாகிய சிவபெருமான் கனிந்து வந்த சுவையாக விளங்கு பவனே! ஒப்பற்ற பரமுத்திக்கு ஒரே வித்துப் பொருளானவனே! காலையில் தோன்றுகின்ற இளங்கதிரவனுக்கு எதிராக முதிர்ந்த ஒளியையுடைய செம்பவளத்தோடு முத்துக்களை இட்டு வணங்கக் கரும்போ! கமுகோ! என உயர்ந்து வளருகின்ற செஞ்சாலிப் பயிர்கள் நிறைந்த வயல்களை யுடைய தமிழ் நாட்டு வேளூர்ப்

பெருமானே! தாலோ தாலேலோ! சங்கத் தமிழின் தலைமைப் புலவனாகத் திகழ்ந்தவனே! தாலோ தாலேலோ.

கருமுகி லுக்கரி தாமடி வாரம்
கண்டிரு பறவைகடம்
கண்களி பொங்கவொர் பறவை முடித்தலை
காணு துட்குவரப்
பொருபுன லருவித் தலையின் மிசைத்தவழ்
புதுமதி நிலவொழுகப்
புள்ளூ ரிற்பொலி வெள்ளி மலைக்கட்
பொன்மலை யைக்குவவு
குருமணி வயிரப் புயமெனு மெட்டுக்
குவடுஞ் சுவடுபடக்
குத்திப் பொருமிரு கோடு படைத்ததொர்
கூந்தற் பிடிபெற்றுத்
தருமொரு தொந்தித் தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ. 28

கருமுகில் போன்ற திருமாலுக்கரிய திருவடிகளாகிய அடிவாரத்தைத் தெரிசித்துச் சம்பாதியும் சடாயுவுமாகிய இரண்டு பறவைகள் தமது கண்களில் களிப்பு மிக்கிருப்பப், பிரமனாகிய ஒரு அன்னப் பறவை சிகரத்தைக் காணாது அச்சமடைய, வேகமாகப் பாய்கின்ற நீரையுடைய கங்காநதியாகிய அருவி சொரியும் உச்சியிலே தவழுகின்ற பிறைச்சந்திரன் நிலவை வீச, புள்ளூரில் விளங்குகின்ற வெள்ளிமலையாகிய கயிலைமலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானாகிய பொன்மலையினது திரண்ட பெரிய அழகிய திண்ணிய தோள்களென்று சொல்லுகின்ற எட்டுக்குவடுகளும் சுவடு படும்படி, குத்தியலைக்கின்ற இரண்டு கொங்கைகளாகிய கொம்புகளைக் கொண்ட ஒப்பற்ற கருங் கூந்தலையுடைய பார்வதி தேவியாகிய பெண்யானை பெற்றுத் தந்த பெருவயிறை உடைய யானைமுகக் கடவுளுக்கு இளையவனே! தாலோ தாலேலோ! சங்கத் தமிழின் தலைமைப் புலவனாகத் திகழ்ந்தவனே! தாலோ தாலேலோ. (தொடரும்)

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு வெண்பா வந்தாதி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுததூர்.

[மலர் 16, இதழ் 9-ன் தொடர்ச்சி]

காப்பு

சீர்சான்ற மெய்ஞ்ஞானசித்தர் மகிழ்ந்தேத்துமொரு
தார்சான்ற ராமலிங்கசற்குரவ — னேர் சான்ற
வெண்பாவந்தாதி விளம்பெனலாலேங்கரநின்
கண்பார்த்தன் முற்றுங் கடன்.

முருகக் கடவுள்

கடம்பணியுங் கந்தா கதிர்வேலா ஞானத்
திடம்பணிநல்லோர்க்கருளுந்தேவா — மடம் படுமென்
வெவ்வினை தீர்மெய்க்குரவன் வெண்பாவந்தாதி சொலச்
செவ்விதி செய்விப்பது நின்சீர்.

நூல்

சீர்மேவு ஞானத்திருவொளியாய் மெய்யிலங்கு
பேர்மேவுமின்பப் பெருவெளியாய்ப் — பார்மேவு
முத்தமர்க்குந்தோன்று தொளிர்கின்ற ராமலிங்க
வித்தகநான் காண விளங்கு. 1

விளங்குகின்ற பல்விடய வேதனையாலென்றுங்
களங்க முறறநெஞ்சக் கடையேன் — றுளங்கலறு
மன்பர்பணிராமலிங்கவாண்டவனே நின்னுபய
வின்பபதம் போற்றவரு ளின்று. 2

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

செய்யுட் கோயில்

வித்துவான். திரு. க. வா. சச்சிதானந்தம் அவர்கள்
43, முருகாட்ட முதலி தெரு, புரசவாக்கம்,
சென்னை – 7.

உலகத்திலுள்ள எல்லா மொழியாளர்களும் தம் தம் மொழியையே சிறப்புடை மொழியாகக் கூறுவர். கூறினும் தமிழர் தம் மொழியைக் கருதியது போல் யாரும் கருதவில்லை என்றே சொல்லலாம். எங்கெங்கு இனிமையைக் கண்டார் களோ அங்கங்குத் தம் மொழியாகிய தமிழ் இருப்பதைக் கண் டார்கள். தென்றலைத் தமிழ்த் தென்றல் என்றார்கள். ஒரு பெண்ணின் இனிய சாயலைப் பார்த்துத் "தமிழ் தழீஇய சாயல்" என்றார்கள். இன்பத்தை யளிப்பவனான இறைவனைத் "தமிழன் கண்டாய்" என்றார்கள். (ஆரியன் கண்டாய் என்று இறைவ னைக் கூறியவரும் தமிழரே. ஆரியர் தம் மொழியையும் இறை வனையும் தொடர்பு படுத்திக் கூறக் கேட்டிலேம்.) தமிழையும் இறைவனையும் தொடர்பு படுத்திப் பாடியவர்களுள் சிறந்த வர்கள் குமரகுருபரரும் சிவப்பிரகாசருமேயாவர்.

இறைவனின் அர்த்தநாரீஸ்வர வடிவத்துக்கு 'ஒருவர்' என்ற தமிழ்ச் சொல்லே பொருத்தமானது என்றும் அவ்வடிவத்தை அழைக்க 'எந்தாய்' என்ற தமிழ்ச் சொல்லே ஏற்றது என்றும் வியந்த பெருமை குமரகுருபரருடையதேயாம். "இறைவனே! நின்பால் பிறவாமையை வேண்டுவார் வேண்டுக. மதுகரம் பெறுகுறு தமிழ்ச் சொல்மலர் நினக்கணியும் பிறவியே வேண்டு வன் நான்" என்று கூறிய பெருமை சிவப்பிரகாசருடையதாம்.

இவ்வாறு தமிழை இயற்கையிலும் இறைவனிடத்திலும் கண்டவர்கள் தமிழர்கள். இறைவனை "ஓசை ஒலியெலாம் ஆனாய்

நீயே" என்றார் அப்பரடிகள். சுந்தரரோ "ஓசை ஒலிகளாற் பிறக்கும் எழுத்துக்களாகவும், எழுத்துக்களாற் பிறக்கும் சொற் களாகவும், சொற்களிடமாகப் பிறக்கும் பொருளாகவும், இறை வன் இருக்கிறான்" என்றார். 'எழுத்துச் சொற்பொருள் ஆனான்' என்றார் அவர். இதிலிருந்து 'எழுத்தாலான சொற்களைக் கொண்டு பொருளுக்கு இடமாக அணிபெறச் செய்யப்படும் செய்யுளாகவும் ஆனவன்' இறைவன் என்று உணரலாம். இவ் வுணர்வு இறையருள் கைவரப் பெற்றவர்க்கே வரும். இறை யருள் கைவரப் பெற்றவர்களுள் ஒருவர் துறைமங்கலம் சிவப் பிரகாசசுவாமிகளாவர். அவர் தம் முன்னோர் செய்யுட்களைப் பார்த்தார். அவற்றில் சிவபெருமான் இருப்பதைக் கண்டார். செய்யுளை ஒரு கோயிலாகக் கருதிவிட்டார்.

"…. …. …. …. …. …. …. …. மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகும்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதவணித்தா — முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள் போக்கிற் கும் பரஞ்சோதி"

திருவெங்கையுலா: 66 – 68.

என்று திருவெங்கையுலாவில் கூறினார். செய்யுளைக் கோயிலாகக் கூறியவர் எவருமில்லை. அப்பெருமை சிவப்பிரகாசரையே சாரும். செய்யுளில் இரண்டு சொற் சேருமிடத்தில் சந்தி எழுத்துப் பொருத்தப்பட்டிருக்கும். அவ்வச் செய்யுளுக்கு ஏற்ற சொற் சீர்கள் தளை கெடாதபடி அடுக்கப்பட்டிருக்கும். படிக்கும் போது மனம் மகிழும்படி அலங்காரம் கொண்டிருக்கும். செய்யுள்போலவே கோயிலிலும் கற்களின் இடைவெளி சுண்ணச் சேற்றால் பொருத்தப்பட்டிருக்கும். வரிசை கெடாமல் கற்கள் அடுக்கப்பட்டிருக்கும். வெளியிருந்தும் உள்ளிருந்தும் பார்ப்ப தற்கு மகிழும்படியான அழகுடையதாயிருக்கும். இவ்வகையில் கோயிலானது செய்யுள் போல் இருக்கின்றது.

சிவப்பிரகாசர் கல்லாற் கட்டப்பட்ட கட்டடங்களைக் கண்டவர். தாமே பலவிடங்களிற் கட்டடங்களின் சிறப்புக் களைக் கூறியிருப்பவர். அங்கெல்லாம் செய்யுள் போற் செய்த கட்டடங்கள் என்று சொல்லவில்லை. சொல்வதால் தவறும்

இல்லை. அப்படியிருக்கக் கோயிலை மட்டும் "செய்யுள் போற் செய்த திருக்கோயில்" என்றார். அரசன் மனையும் கோயில் எனப்படும். படவே அரசன் கோயிலையும் அப்படிப் பாடவில்லை. ஏன்? அவர் செய்யுளிற் கடவுளைக் காண விரும்பியவர். அதனால் செய்யுள் என்றால் கடவுளைப் பொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆராய்பவர். அதனாலன்றோ 'தமது வாசகத் துக்குப் பொருள் தில்லை நடராசப் பெருமானே' என்று குறித்த மாணிக்கவாசகரைப் பார்த்துப் "பாவெனப் படுவது உன் பாட்டே" என்றார்.

கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்று வள்ளுவர் விளக்கினரென்றால் கற்கப்படும் செய்யுட்கள் இறைவனைப் பொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறில்லையே! இப்படிக் கொண்டமையால் தான் செய்யுளை வெறுங் கட்டடத்துக்கு உவமையாக்காமல் திருக் கோயிலுக்கு உவமையாக்கினர்.

திருக்கோயிலின் உள்ளிருப்பவர் சிவபிரான். அவர் பிற வித் துன்பத்தைப் போக்குபவர். செய்யுளின் உள்ளிருப்பது பொருள். அப்பொருள் துன்பத்தைப் போக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். சிவப்பிரகாசர் கண்ட முந்தையோர் செய் யுட்கள் அப்படிப்பட்டனவே. அச்செய்யுட்களின் பொருள்கள் பிறவித் துன்பத்தைப் போக்குவனவாகக் கண்டார். அதனால் உவமை கூறினர்.

கோயிலைக் கடவுளின் பருத்த உடல் (தூல சரீரம்) என்பர். உள்ளிருக்கும் வடிவை நுண்உடல் (சூக்கும சரீரம்) என்பர். புறம்பேயிருந்து கோயிலை வணங்குகிறோம். உள்ளே சென்று கடவுளை வணங்குகிறோம். செய்யுளும் பார்த்த அளவில் — படித்த அளவில், பொருள் விளங்கா விட்டாலும் மதிக்கப் பட வேண்டியதாம். அதனால் தான் சிறு வயதில் பிள்ளை களைப் பொருள் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமே மூல பாடங்களைப் பற்றுதலோடு மனப்பாடம் செய்யச் சொல்லு கிறோம். கோயிலை வணங்கிப் பின் உள்ளிருக்கும் கடவுளை வணங்குதல் போலச் செய்யுட்களை முன் நன்கு படிக்கச் செய்து பின் பொருள் சொல்லுகிறோம். பொருள் தெரியாமலே செய்

யுளைப் பன்முறை படிப்பதாலும் சிறிது பொருளும் விளங்கிவரும். அதனாற் பயனும் உண்டு. அதனாலன்றோ பத்திப் பாடல்களைப் பொருள் தெரியாவிட்டாலும் இறைவன் முன்னிலையில் பாடும் பழக்கமும் வழக்கமும் வந்தன. அவ்வாறு பாடிப் பயனும் பெறுகின்றனர். பெறவே செய்யுளைக் கோயிலுக்கு உவமை யாக்குதல் முற்றும் பொருந்துமாறு அறிக.

திருக்கோயில் தூய்மையானது – அசுத்தம் செய்யப்படா மல் காக்கப்பட வேண்டியது. செய்யுளும் தூய்மையானது. மிதிக்கப்படாதது. புத்தகத்தில் கால் பட்டால் தொட்டுக் கும் பிடும் பழக்கம் இன்றும் உண்டு. அது இதுபற்றி வந்ததேயாம். புத்தகத்தைக் கீழே வைப்பதும், எறிவதும் கண்டால் பெரி யோர்கள் அவ்வாறு செய்யாமல் தடுப்பதும் அதை மதிக்க வேண்டும் என்ற கருத்திலேயாம்.

திருக்கோயில் யாவர்க்கும் பொது; எல்லாருக்கும் இட மளிப்பது. முந்தையோர் செய்யுளும் யாவர்க்கும் பொது; யாவ ராலும் படிக்கப் படுவது. கோயில் கடவுளும் பொது; அருள் தருவது. செய்யுளின் உட்பொருளும் பொது; இன்பம் தருவது. எக்கட்டடமும் பொது ஆகா; உள்ளிருப்போரும் அப்படியில்லை.

திருக்கோயிலைக் கட்டுபவன் கூலியை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் கடவுளை மனத்திற் கொண்டு பயபத்தியுடன் கட்டுவான். கட்டிடம் கட்டுபவன் கூலியே முக்கியமாகக் கொள்வான். முந்தையோரும் உள்ளுறையும் பொருளையே முக்கியமாகக் கொண்டு செய்யுள் செய்தனர்.

செய்யவே ஒரு செய்யுள் தன் உள்ளிருக்கும் பொருளால் படிப்பவனின் துன்பத்தைப் போக்கும்படி யிருத்தல் வேண்டும் என்று கருதியும் அவ்வாறு முந்தையோர் செய்யுட்கள் அமைந் திருந்தமை கண்டும் செய்யுளைக் கோயிலுக்கு உவமை கூறினார் சிவப்பிரகாசர். அதனால் தான் “செய்யுள் போற் செய்த திருக் கோயிலுள்ளிருந்து எம் பையுள் போக்கிற்கும் பரஞ்சோதி” என்றார் அவர். நாமும் செய்யுளைக் கோயிலாகவும் பொருளைக் கடவுளாகவும் கொண்டு வழிபடுவோமாக.

HE IN THREE ROLES

Prof: E. S. VARADARAJA IYER.

There once lived in the city of Madura during the reign of Vikrama Pandya a pious saiva Brahmin named Virupaksha with his wife Supavirathai of spotless chastity. Issueless for a long time they were blessed with a girl as a result of severe austerities. The child was named Gowry and was brought up with considerable affection. Highly precocious as she was, the girl, even when she was five years of age, asked her father to tell her the mantra which will put an end to her birth. The parent quite astonished at such a query proceeding from a young girl, taught her the Panchakshara mantra. The girl practised the mantra with love and devotion. When she was eight years old her father longed to see a young bachelor of parts well-versed in the Vedas in order that he may give her in marriage to him.

One day a Vaishnavite bachelor approached him for alms. On seeing him, he poured water on the boy's hand and gave his daughter in marriage to him, without consulting his wife and relatives. Seeing the fate of the young girl with tinkling anklets and the good luck that fell on the begging bachelor, and annoyed at the way in which the Brahmin poured the water in confirmation of the wedding, his wife and relatives became depressed in mind. They waxed angry saying that the Brahmin gave her in marriage

without considering the boy's ancestry, gotra antecedents of his family, his own disposition and learning. Even apart from other considerations, their main concern was about the alliance with a Vaishnavite family.

After sometime they got reconciled and the girl was married to him in all pomp. The boy who was as lucky as a poor man who unexpectedly hits at a treasure, took her to his house. Her parents-in-law who beheld them, got wild on seeing the Saiva marks on her body, locked the house-door and went away to an adjoining village to attend a marriage leaving the young girl to her fate.

The girl thus dis-carded by her parents-in-law got vexed as she could not come across as her guest even a single Saiva devotee and exclaimed as follows: "The heart that has no love for a Saiva devotee is iron itself; the frame that does not render services to a devotee is a tree. The human frame that does not direct its five senses to administer to their wants is a doll. The sheet-anchor for all human beings under the sun are Ikam and Param, here and hereafter. One who bestows them on all beings is Siva. Bhakti or devotion generates in the mind which constantly meditates on him and those who are his staunch devotees are the very persons who will help one to tide over the valley of births and deaths."

While she was thus brooding over her un-happy lot, Lord Siva, with intent to show his grace on her, came down in the guise of a venerable old Saiva devotee with a book in hand, wearing the Rudraksha or the sacred beeds. His cheek was sunk, his face

shrunk and his body was bent as a bow. With his head shivering he knocked at the door. The old man who looked like one who had no meals for a number of days consecutively, approached her and begged for alms, saying that he was terribly hungry. The girl told him that she was alone, that her parents-in-law went away locking the door and that she was helpless. The lord thereon asked her to simply touch the lock. She did as she was bid and to her surprise the door opened of its own accord. The girl then cooked the six proverbial dishes, received him warmly, cleaned his feet, seated him on a wooden plank, spread before him the plantain leaf and served the cooked rice as white as the mount Kailasa as well as the red-dhall. The Saiva devotee enjoyed the feast and as soon as he washed his hands and feet stood in front of her as a robust young lad of sixteen. The white sacred ash gave place to sweet smelling sandal, and the Rudrasha gave place to golden ornaments. The girl who witnessed the metamorphosis stood non-plussed and did not know what to do.

At this critical stage her parents-in-law who had been to an adjoining village to attend a bridal ceremony, returned and rapped the door. The door stood ajar and then while they made their entry in their house, the young man took the form of a child. The vedic anklets tinkled on his ankles and the child lay with his toe on his lips, the finger which often blossoms in the flowery brook of a devotees' heart fraught with the honey of Sivananda. The child wept as it lay. The mother-in-law, when she saw the child, stood aghast and asked the girl how it came there. Gowri told her that a neighbour of hers placed it, requesting

her to take care of it for a while. Enraged on hearing the above words, the ruthless Vaishnava parents drove her and the child out of the house and closed the front door with a bang after her. Now Gowri chanted the holy mantra taught her by her father and lo, as a miracle what did the bystanders see but Gowri tranformed. as Parvathi and seated by her Lord Siva on the white bull or Rishapa.

This is an English rendering of the 23rd Thiruvilayadal described by Paranjothi Munivar.

ராகம் (சகாறு) தாளம் ஆதி

பல்லவி

ஸ்ரீவைகுண்டம் கையாலயபுரமென்னும்
பதிதனில் வாழ்நதிடவே
நல்லதவம் செயதிடவேண்டும் முன்னே.

அனுபல்லவி

பொருணைநதிக்கரையில் மலர்ப்பொழில்
சூழ்ந்திலங்கும் ஏகாந்தச் சூழ்நிலையில்
அருளுருவாக நின்றே அபயம்
அளித்திடும் கைலாயன் மலரடி
தொழுதருள் பெறுவோமே.

சரணம்

பிறவிப் பிணியகன்று ஆத்ம
சாந்தியடைந்திட ஐந்தெழுத்தை
நெஞ்சில்வைத்து அருந்துணையானவனை
பொற கமலத்தாள் பணிந்து
தினம் புகழ பாடுவோமே. (ஸ்ரீவை)

சு. விஜயாம்பிகை,
ஸ்ரீவைகுண்டம்.

இரவாத நிலை

உலகத்தில் மக்கள் யாவருமே பொருள் தேடுவதில் ஈடு பட்டிருக்கிறார்கள். எப்படியாவது பொருளைத் தொகுக்க வேண்டும் என்ற நாட்டம் நாளாக ஆக அதிகமாகி வருகின்றது. நியாயமான முறையில் பொருளை ஈட்டுவது நம் கடமையுள் ஒன்று.

" செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில் "

என்பது வள்ளுவர் வாக்கு. வேறு வகையிலும் பொருளைப் பெறலாம். இரந்தேனும், கடன் வாங்கியேனும், திருடியேனும் பெறலாம். இவை மூன்றும் அறத்திற்குப் புறம் பானவை. ஆயினும் உலகில் பலர் இரந்தே தம் வாழ்நாளைப் போக்கு கிறார்கள். சில செல்வர்கள் மனம் இறங்கி அவர்களுக்கு ஈகிறார்கள். இரந்து பழகினவர்களுக்குத் தொழில் செய்து பிழைக்கலாம் என்ற எண்ணமே உண்டாவதில்லை.

இரப்பது மிகவும் இழிவான செயல்; அதைக் காட்டிலும் இரப்பார்க்கு இல்லை என்று சொல்லுதல் அதைவிட இழிந்த செயல். புறநானூற்றில் இந்தக் கருத்து வருகிறது.

" ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று."

இன்னும் பலர் தம்மிடம் இருப்பதை மறைத்து, "உனக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லையே" என்பார்கள். அவர்களை நோக்கியே ஔவைப் பிராட்டி, "இயல்வது கரவேல்" என்றாள்.

சிறந்த வள்ளல்கள் தம்மிடம் உள்ளவற்றைக் கரவாமல் இரவலாளருக்குக் கொடுப்பார்கள். இன்னும் இவர்களுக்குக்

"அமிர்தவசனி" விசுவாவசு ஐப்பசிமீ மலர் 17. இதழ் 7-ல் வெளி வந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

கொடுக்கும்படி நம்மிடம் என்ன இருக்கிறது? என்று யோசித்து யோசித்துப் பார்த்துக் கொடுப்பார்களாம். கம்பர்,

"உள்ளி உள்ளவெல் லாம்உவந்து ஈயும்அவ்
வள்ளியோர்"

என்று அத்தகைய கொடையாளிகளின் இயல்பைச் சொல்கிறார்.

லோபிகள் தம்மிடம் இருப்பவற்றை ஒளிதது வைப்பார்கள். கல்லில் நார் உரித்தாலும் உரிக்கலாம்; அவர்களிடம் ஒன்றும் பெற முடியாது. அவர்கள் எப்படியெல்லாம் பணத்தை ஒளித்து வைக்கலாம் என்று யோசித்துப் பார்ப்பார்கள், தந்திரங்களைக் கற்றுக்கொள்வார்கள். பொருளை மறைப்பதற்குரிய யுக்தி வகைகளைத தெரிந்துகொண்டவர்கள், இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள்; ஏராளமாக இருக்கிறார்கள்.

கரப்பதிலே பயிற்சி பெற்றுத் தேர்ந்து தம்பொருளை வெளி விடாது பணம் காத்த பூதங்களாக இருக்கிறார்களே, அவர்களு டைய வாசலைத் தேடிச்சென்று, "ஐயா, எனக்கு இதுதா" என்று *கேட்காத வரம் ஒன்று அருளவேண்டும்'* என்று அருணகிரியார் முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார். அவ்வாறு இரந்து ஏதேனும் பொருள் பெற்றாலும் அது எத்தனை நாளைக்கு நிற்கும்? முறையாக ஈட்டிய பொருளே நில்லாமல் போய்விடுகிறது. பொருளின் இயல்பே அது. சேர்ந்தாற்போல் மூன்று தலை முறைகள் பணக்காரராக இருப்பதில்லை செல்வம் சகடக்கால் போலவும் ஆற்றில் உண்டாகும் மேடும் மடுவும் போலவும் இருப் பதுதானே? ஆகவே அது மெய்யாக நிலைப்பதுஅன்று; மெய்ப் பொருள் இறைவன் ஒருவன்தான். அவனுடைய திருவருளே என்றும் மாயாத செல்வம்.

"எப்போதும் தம்பொருளை ஒளித்து வைக்கும் தந்திரங் களைக் கல்வியைப் போலக் கற்கும் லோபிகளிடம் சென்று இரவாதபடிக்கு உன்திருவருளாகிய மெய்ப்பொருளை அடியே னுக்கு வழங்குவையோ?" என்று அருணகிரிநாதர் முருகனை நோக்கி இரக்கிறார். அவன தன் அருளை மறைப்பதில்லை. உயிர்க்கூட்டங்களுக்கு வழங்குவதற்காகவே வைத்துக்கொண்

டிருக்கிறான். அவனிடம் கேட்பது நல்லது. கரவாதவர்களிடம் இரப்பதிலும் ஒரு கௌரவம் இருக்கிறதாம். வள்ளுவர் அப்படிச் சொல்வார்:

" கரப்பிலா நெஞ்சிற் கடன்அறிவார் முன்நின்று
இரத்தலும்ஓர் ஏஎர் உடைத்து."

அதனால் அருணகிரியார் முருகனிடம் மெய்ப்பொருளைக் கேட்கிறார். பொய்ப்பொருளை மறைத்து வைத்திருக்கிறவர்களிடம் போய் இரவாமல் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

கரவா கியகல் வியுளார் கடைசென்று
இரவா வகைமெய்ப் பொருள்ஈ குவையோ?

[கடை-வாசல். மெய்ப்பொருள்-இங்கே, அருள்.]

நமக்கு இறைவன் அருள் கிடைத்தால் அதுவே பெருஞ் செல்வமாக நின்று நமக்கு எல்லா வாழ்வையும் தரும். இந்த அழியும் செல்வம் அப்போது வேண்டியதில்லை. ஆயிரம் ரூபாய் உத்தியோகம் பார்க்கிறவனுக்கு ஐந்நூறு ரூபாய் உத்தியோகம் வேண்டியதில்லை. அதை அவன் விரும்பவும் மாட்டான். இரண்டாயிர ரூபாய் சம்பளம் கிடைக்குமானால் ஆயிர ரூபாய் வேலையை விட்டுவிடுவான். செல்வமாகிய பொருளுக்காக ஏங்குபவனுக்கு இறைவன் திருவருள் கிடைத்துவிட்டால் அந்தச் செல்வத்தினிடம் நாட்டம் செல்லாது.

பொருளைவேண்டித் தானே கரப்பவர் வீட்டுக்குச் சென்று அவர்கள் வாயிலிலே நின்று இரக்க வேண்டியிருக்கிறது? அந்தப் பொருளே வேண்டாதநிலை வந்துவிட்டால் அப்பால் யாரையும் நாடவேண்டிய அவசியம் இல்லை. ஆதலால் அருணகிரிநாதர் முருகனிடம், "மெய்ப்பொருளைத் தருவாயோ?" என்று கேட்கிறார். தருவாயோ என்று வினாவாக இருந்தாலும் தரவேண்டும் என்னும் பொருளை உடையதாகவே கொள்ள வேண்டும்.

"எனக்கு ஐந்து ரூபாய் இருந்தால் தருவாயா?" என்று ஒருவன் மற்றொருவனைக் கேட்கிறான். "ஐந்து ரூபாய் தா"

என்று கேட்க வேண்டியதையே அப்படிக் கேட்கிறுன். அந்தக் கேள்வியைக் கொளல் விஞ என்று இலக்கணம் கூறும். இங்கும், ''இரவாவகை மெய்ப்பொருளே அருளவேண்டும்'' என்பதே கருத்து.

அருணகிரி நாதருக்கு லோபியரிடம் கோபம் உண்டு; "வஞ்சக லோபமூடர்" என்று திருப்புகழில் கூறுவார். 'அத்தகைய வஞ்சகர்கள் வாசலில்போய் நின்று கைநீட்டும்படி செய்யாதே! என்றைக்கும் மாறுப் பொருளாக உள்ள நின் அருளே வழங்கு' என்று கேட்கிறுர் இங்கே.

இனி முருகனே விளிக்கிறுர். ஐந்து விதமாக முருகனே விளிக்கிறுர். அடுத்தடுத்து விளிப்பது உள்ளன்பைக் காட்டும். முதலில் "குரவா!" என்று விளிக்கிறுர். அவன் எல்லாக் குருக் களுக்கும் மேலான குரு: குமரகுருபரன். முனிபுங்கவர்களுக்குக் குருவாக விளங்கிய தட்சிணுமூர்த்தி சிவபெருமானே. அந்தச் சிவபெருமானுக்குப் பிரணவோபதேசம் செய்தவன் முருகன். அதனுல் அவன் எல்லோரினும் சிறந்த குருவென்ற சிறப்பைப் பெற்றிருக்கிறுன். சிவபெருமானுக்கு உபதேசம் செய்ததோடு, வள்ளி நாயகிக்கும் செய்திருக்கிறுன். அகத்தியனுருக்குச் செந்தமிழைக் கற்பித்திருக்கிறுன். ஞானகுருவாகவும் வித்தியா குருவாகவும் அவன் இருந்து நல்லுபதேசம் செய்திருக்கிறுன்.

அவன் இவ்வளவு பெரிய குரவனுக இருந்தும் இன்னும் இளேஞன்தான். மன்மதன் கருவத்தைக் குலேக்கும் அழகிளேஞன். ஆகவே, ''குமரா'' என்று அடுத்தபடி அழைத்தார்.

பிறகு அவன் தெய்வ யானேயை மணந்துகொண்ட பெரு மான் என்பது நினேவுக்கு வருகிறது. எழிலும் இளமையும் உள்ள குமரன் என்றுல் அவனே மணக்கப் பலபேர் வருகிறுர்கள் அல் லவா?இந்திரனும் பிறதேவர்களும் வேண்டசூரபன்மனே முருகன் அழித்து மீட்டும் தேவலோகத்தை அவர்களுக்குக் கொடுத் தருளினுன். அப்போது யாவரும் வேண்டிக் கொள்ள தேவ யானே யம்மையை மணந்தான். குமரன் மணம் செய்து கொள் வது முறைதானே? குமரா என்றவுடன் அவர் திருமணமும்

தேவியும் நினைவில் தோன்றக் கண்டார். இந்திரனுக்குச் சொந்தமான வெள்ளையானை அப்பிராட்டியை வளர்த்தது. அதனால் தேவகுஞ்சரி, தேவயானை என்ற பெயர்கள் உண்டா யின. தேவகுஞ்சரம் என்றும் கூறுவர். குலிசாயுதனாலே வளர்க்கப்பெற்ற குஞ்சரமாகிய தேவ யானையை உடைய பெரு மானே என்று அடுத்த விளி வந்தது.

குலிசாயுத குஞ்சரவா!

குலிசம் என்பது வச்சிரத்துக்குப் பெயர். அது இந்திர னுடைய ஆயுதம். குலிசாயுதனுக்குரிய குஞ்சரத்தை மனைவி யாகப் பெற்றவனே என்று பொருள் செய்துகொள்ள வேண்டும்.

இந்தத் தொடரைக் குலிசாயுத, குஞ்சரவா என்று இரண்டு திருநாமங்களாகவும் பிரிக்கலாம்; முருகனுக்கும் வச்சிரப்படை உண்டு. ஆதலால் வச்சிராயுதத்தை உடையவனே, தேவகுஞ்சரி மணவாளா என்று கொள்ளலாம்.

முருகன் மணம் செய்து கொண்டிருந்தாலும் சில சமயங் களில் சிவபெருமானைப்போல யோகியாகவும் இருப்பான். சிவ யோகத்தை உபதேசிப்பான். சிவயோகம் செய்பவர்களுக்கு லட்சியப் பொருளாக விளங்குகிறான். இவ்வெல்லாவற்றையும் எண்ணி அடுத்தபடி, "சிவயோக!" என்று விளித்தார்.

கடைசியில் இப்படி யெல்லாம் நின்று விளையாடல் புரிவ தற்கு மூலகாரணம் அவனுடைய பேரருளே என்ற எண்ணம் உண்டாகிறது. அவன் அருள் நிரம்பியவனாக இருப்பதனால் தான் திருவவதாரம் செய்து தீயோரைச் செகுத்து நல்லோரை நாட்டுகிறான். அவன் தயைப் பெருங்கடல் என்பதை இறுதி யில் நினைந்து, "தயாபரனே" என்று கூறுகிறார்.

சிவயோக தயாபரனே!

இவ்வாறு ஆறு விதமாக முருகனை விளித்து,' பொருளைக் கொடுக்காமல் மறைப்பவர்களின் வீட்டு வாசல் ஏறாதபடி மெய்ப் பொருளாகிய நின் திருவருளை வழங்கு" என்று வேண்டுகிறார் அருணை முனிவர்.

கரவா கியகல் விஉளார் கடைசென்று
இரவா வகைமெய்ப் பொருள்ஈ குவையோ?
குரவா, குமரா குலிசா யுத,குஞ்
சரவா, சிவயோக, தயா பரனே.

[கரவு - உள்ளதை மறைத்தல். கடை - வாசல். மெய்ப் பொருள் - அருள். குரவன் - ஆசிரியன். குலிசாயுதன் - வச்சிரப் படையை உடையவன். தயாபரனே - தயையை உடையவனே.]

[இது கந்தர் அநுபூதியில் 45-ஆவது பாட்டு.]

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சேக்கிழார் சுவாமிகள் அருளிய

★ பெரிய புராணம் ★

(பன்னிரண்டாம் திருமுறை)

[புதிய பதிப்பு]

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 276-வது குருபூசைத் திருநாள் நினைவு வெளியீடு

952 பக்கங்கள் கொண்டது, (26 + 926)

உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றது.

★ பிரதி ரூ. 3-00 ★

(தபால் கட்டணம் வேறு)

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம் — (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 11-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPAR SWAMI)

63\. திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
றீவண்ணர் திறமொருகாற்பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள்கெடவெண்ணீ றணியாராகில்
லளியற்றார் பிறந்தவாறேதோவென்னிற்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகியிறக்கின்றாரே.

63\. If men speak not His name in letters five,
Nor e'er the fire-formed Siva's praise repeat,
And never walk in reverence round His shrine,
And pluck no flowers for offering ere they eat,
If they for healing wear no sacred ash,
I'll tell you whereunto such men were born,
'Twas that foul plagues might torture them to death,
Then death bring rebirths endlessly forlorn.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B Copies available for sale at the above Press.)

பகழிக்கூத்தர்

தேவார இசைமணி,
திரு சா. சங்கரநாராயணன் அவர்கள்,
ஸ்ரீ ரெத்தினகிரீசுவர சுவாமி ஆலயம்,
திருமருகல P O. நன்னிலம் வட்டம.

பேராதரிக்கும் அடியவா தம்
    பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங்கொடுகக வரும் பிள்ளைப்
    பெருமான் என்னும் பேராளா
சேரா நிருதர்குல கலகா
    சேவல் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவாசிறை மீட்ட
    செல்வா என்றுன திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
    பரவிப் புகழ்ந்து விருப்புடன்(அ)ப்
பாவா வாவென்றுனைப் போற்றிப்
    பரிந்து மகிழந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக் குண்டோ
    வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
    வள்ளி கணவா வருகவே.

இந்தப் பாட்டைப் பாடாத முருகன் தொண்டர் எவருமில்லை; அதைக் கேட்டு உருகாத நெஞ்சமுமில்லை; இந்தப் பாடல் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழில் உள்ளது என்பதை அறியாதாரும் இருக்க முடியாது. கல்நெஞ்சமும் கரையவல்ல இந்நூலையாத்த பெரியார் யார்? அவர் வரலாறு என்ன? இப் பாமாலையைப் புனையக் காரணம் ஏதேனும் உண்டோ? இதை

ஓதுவதின் பயன்தான் யாது? இன்னோரன்ன பிற கேள்விகள் எழுவது இயற்கையே. பிள்ளைத்தமிழில் ஏதாவது ஒரு பாடல் பாடுங்கள் என்று ஒருவரைக் கேட்டால் உடனே மேற்கண்ட திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்ப் பாடலைத்தான் பாடுவார். ஆதலின் அதில் ஏதோ ஒரு மகிமை இருக்கவேண்டும் அல்லவா? பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடிய அப்புலவர் பெருமான் ஒரு வைணவர் என்று கூறினால் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள அவா எழத்தான் செய்யும்.

செந்தமிழின் திறம் வளர்த்த சேது மன்னர்களுக்கு இருப்பிடம் இராமநாதபுரம். அவ்வூர்க் கருகிலே சன்னசிக் கிராமம் உள்ளது. வைணவ அந்தணர்கள் வாழும் சிற்றூர். தர்ப்பாதனர் என்று ஒருவர் இருந்தார். திருப்புல்லணையில் (தர்ப்பசயனத்தில் திருக்கண் வளரும் இராமபிரானுக்குள்ள தர்ப்பாதனர் என்ற திருநாமத்தையே அவருக்கு இட்டனர். சேது நாட்டுப் புகலூரிலுள்ள ஐயனர் அவருக்கு குலதெய்வம். அத்தெய்வத்தை அரிகரபுத்திரர், பகழிக்கூத்தர் என்றும் வழங்குவர். தர்ப்பாதனருடைய மைந்தருக்கு பகழிக்கூத்தா என்று தன் குலதெய்வத்தின் பெயரிட்டார். அம்மகனர் இளமையிலேயே வடமொழி, தமிழ் மொழி நூல்களையும் ஐயந் திரிபறக் கற்றார். கவிபாடும் வல்லமையும் பெற்றார். இறைவனையே பாடவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் குடிகொண்டது. எந்த தெய்வத்தைப் பாடுவது? யார் அருள் கிட்டுமோ அவரையே பாடலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதற்கு ஒரு வழியும், வாய்ப்பும் வரவேண்டும் காலத்தை எதிர்நோக்கி இருந்தார். இறைவன் அருள் எளிதில் கைகூடி விடுமா?

பகழிக்கூத்தருக்கு வயிற்றுவலி உண்டாயிற்று. அது அவருக்கு ஆற்றொணாத தொல்லை தந்தது. அந்தக் கொடிய நோய்க்கு எல்லைதான் கிடையாதா என்று மனம் நொந்து துடிதுடித்தார். மணிமந்திர மருந்து முயற்சிகள் யாதும் பயனில்லாது போயின. சூலை நோய் வளர்ந்ததேயொழியக் குறைந்தபாடில்லை. ஆற்றேன் அடியேன் என்று அலறிக் கதறிக் கண்ணீர் பெருக்கிக் கண்ணுறங்கினார் ஓர் இரவில். ஒரு

களுக் கண்டார். திருச்செந்தூர் திரிசுதந்திரர் ஒருவர் அவர் முன்னின்ருர். பகழிக்கூத்தர், "யார் நீவிர்? என்ன வேண்டும் உமக்கு?" என, அவரும் "செந்திலிலிருந்து போந்தேன். பிள்ளைத் தமிழில் பேரவா எமக்கு அதிகம்," என்று சொல்லி எழுதிய ஏடு ஒன்றும், இலவிபூதியும் அளித்தார். கனவு கலைந்து கண் விழித்தார் பகழிக்கூத்தர். தலையணை மேல் ஏடும், இலைத்திருநீறுங் கண்டார்; திருநீற்றையணிந்தார் ஏட்டைப் படித்தார். பின்வரும் பாடல் :-

பூமாது போற்றும் பகழிக்கூத்தா உன்
பாமாலை கேட்க யாம்பற்றேமா — ஏமம்
கொடுக்க அறியேமா கூற்றுவன் வாராமல்
தடுக்க அறியே மாதாம்.

அவ்வளவில் மெய்ம்மயிர்க் கூச்செறிந்தது; நெஞ்சம் நெகிழ்ந் தது. முருகா! முருகா! குகா! சரவணபவா! கந்தா! கடம்பா! கார்த்திகேயா! வடிவேலா! என்றெல்லாம் சொல்லி அலறினர். வயிற்றுவலியும் மறைந்தது. முருகன் திருவருளை நினைந்து நினைந்து நெக்குருகினர். அவன் அருளிய பாட்டின் முதற் சொல்லான "பூமாது" என்பதை வைத்துத் தொடங்கி பிள்ளைத் தமிழைப் பாடி முடித்தார். திருச்சீரலைவாய் சென்று செந்தி லாண்டவன் திருமுன் அரங்கேற்ற எண்ணி அங்குபோய்ச் சேர்ந்தார்; அங்குள்ளாரிடம் எண்ணத்தைச் சொன்னர்; எவரும் கவனிக்கவில்லை. கவலையுடன் கண்ணுறங்கினர். முருகன் கனவில் தோன்றி 'ஆற்றூர் ஆலடியின்கீழ்போய் அமர்ந்திரு' என்று ஆணையிட, பகழிக்கூத்தரும் அவ்வாறே செய்தார். அதே இரவில் குலசேகரன்பட்டினத்திலுள்ள காத்தபெருமாள் மூப்பனர் கனவில் தோன்றி பிள்ளைத்தமிழ் பாடிக்கொண்டு வந்திருக்கும் பகழிக்கூத்தரை ஆதரிக்குமாறு பணித்தார். மூப்பனர் காலையில் ஆற்றூர் ஆலடியின்கீழ் அமர்ந்துள்ள பகழிக்கூத்தரைக் கண்டு வணங்கினர். தம் பல்லக்கில் அவரை ஏற்றிக் கொண்டு செந்தி லம்பதியை அடைந்தார். பிள்ளைத தமிழை யானைமேல் வைத்து நகர்வலம் செய்வித்தார். முருகன் திருமுன அரங்கேற்றம் நடந்தது. அவ்வமயம் வானெலியினின்றும் எழுந்தது ஒரு பாடல் :—

செந்தமிழ்க்கு வாய்த்த திருச்செந்தி லமபதியில்
கந்தனுககுப பிள்ளைக் கவிசெய்தான—சொநதத
திருமார்பு சேர்மார்பன தோப்பாகன வண்மை
திருமால் பகழிக கூத்தன்.

காத்தபெருமாள் மூப்பனுரும், பகழிக்கூத்தரும் காலம் தவருது கந்தனை வந்தித்து வழிபாடாற்றி வருவாராயினர். ஒருநாள் தெருவில் தொண்டர்கள் திருப்புகழ் முழக்கம் செய்தனர். இருவரும் காதலாகிக்கசிந்து கணணீர்மல்கிக் கைகூப்பி மெய் மறந்து நின்றனர். அவ்வளவில் இறைவன் தன் திருவடி நீழலில் அவர்களைச் சேர்த்துக் கொண்டான். உயிர்ப்பிணி, உடற்பிணி, நீக்க விழைபவர்கள் திருசசெந்தூர் முருகன் பிள்ளைத் தமிழை ஓதி உய்வார்களாக.

ஸ்ரீ செந்திலாண்டவன துணை.

திருமுறை நணபாகளுக்கு ஓர் அரிய வாயப்பு

அகத்தியர் தேவாரத்திரட்டு

புதிய பதிப்பு

விசுவாவசு ஆணடு ஆவணி மூல வெளியீடு

99+19=118 பக்கம வெளளைததாள

அகததியர் தேவார ததிரடடின வரலாறு, குறிபபுரைகள் ஆகியவை, அடஙகியது,

தனிப் பிரதி அடக்க விலை ரூ. 0-36.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு. தபால கட்டணம வேறு.

கிடைககுமிடஙகள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். (திருநெலவேலி ஜில்லா)
2. "தியாகராச விலாசம்"
பிளளையார கோயில் தெரு, ஒருமேடடுச்சுவாமிநாயககன்பேட்டை, திருவலலிகடேணி, சென்னை-5.

ஒன்று வேண்டும்!

திரு. ஆ. துரை அவர்கள்
வித்துவான் – முதனிலை, செந்தமிழ்க் கல்லூரி.

வானத்தில் "பிறைநிலவை" கண்ட போது
வற்றாத அருளுருவே! சிவமே! உன்னை
மோனத்தில் கண்டேன்நான்! கரங்குவித்தேன்!
முழுஇரவும் உன்னருளில் மூழ்கிப் போனேன்!!

"நீர்நிலை"யைக் காண்கின்ற போதி லெல்லாம்
நின்மலனே! நிலைபொருளே! சிவமே! உன்னை
யார்எனநான் கண்ணுற்றேன்! கரங்கு வித்தேன்!
எம்மலத்*தைக் கழுவுதற்கு வரமுங் கேட்டேன்!!

ஊழ்வினையால் பிறந்திட்ட ஏழைப் பிள்ளை
'எண்ணையற்றுச்' சீவாத "சடையைக்" காணில்,
வாழ்வதனை திருநிலையாய்ப் படைத்த சிவமே!
வாழ்வினிலே ஒன்றியுள்ள உன்னைக் கண்டேன்!!

வெண்ணீறு பூசிவரும் "அடியார்" காணில்
விரிசடையன் என்னப்பன் ஈசன் உன்னைக்
கண்ணுற்ற பயனாகக் கண்டேன்! உள்ளம்
கரைந்திடவும் கனிந்திடவும் உருகிப் போனேன்!!

உருகியநான் உன்பாதத் துறைவ தற்கே
ஒருவரந்தான் கேட்கின்றேன், ஈசா! இந்தப்
பெருவெளியில் பேயேனை இருக்கச் செய்யாப்
பேரழைப்புன் னருமழைப்பே ஒன்று வேண்டும்!!

---

* ஆணவம், மாயை, கன்மம் என்பன.

வான் முகில் வழாது பெய்க!

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

ஏந்த ஒரு பொருளும் அது இருக்கின்ற பொழுதைக் காட்டிலும் இல்லாத பொழுதே அதன் இன்றியமையாமை விளங்கும். மிகவும் சாதாரணமான பொருளுக்கே இந்நிலைமையாயின் அனைத்துயிர்களுக்கும் இன்றியமையாத மழையின் இன்றியமையாமை அதுவும் இவ்வாண்டில் எப்பொழுது பெய்யுமோ என ஏங்கித் தவிக்கும் நிலையில் அதன் இன்றியமையாமை சொல்லவும் வேண்டுமோ!

ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்க் காலமாகும். இப்பருவத்தில் கதிரவனின் ஒளியைக் காண்டலே அரிது. இடையறுது நுண்துளி சிதறிக்கொண்டே இருக்கும். ஆனால் இவ்வாண்டிலோ இதற்கு நேர்மாருக உள்ளது. மழை வழக்கம்போலப் பொழியின் அதனருமையை நினையமாட்டார்கள் என்றே இறைவன் இத்தகைய அருள் விளையாட்டைச் செய்கின்ருன், என்று கூட நினையத் தோன்றுகிறது. "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்ருர் இராமலிங்க அடிகள். அதை அனுபவத்திற்குக் கொண்டு வந்து விட்டது இவ்வாண்டின் சூழ்நிலை. அந்தோ! பயிர்கள் காய்ந்தது போலும்! இனிக் கனிந்திட வேண்டுமென இறைவனையே நோக்கி வேண்டுவதல்லது வேறு என் செய்ய வல்லோம். வேண்டத் தக்கது அறிவோன், வேண்ட முழுதும் தருவோனுகிய இறைவன் கருணை செய்தருள்வாளுக!

நமக்கு ஒவ்வொரு அனுபவமும் தோன்றும்பொழுதுதான் நமக்கு வேண்டியவற்றையும் அவற்றின் இன்றியமையாமை

பற்றியும் நினைகின்றோம். ஆனால் அருளனுபவ முடையவர்களோ தமக்கு எவையும் வேண்டுவது இன்றேனும் பயிர்கள் பொருட்டு அவற்றிற்கு இன்றியமையாதன வெல்லாம் எவையெவை என நினைந்து அவற்றை இறைவனிடமே வேண்டியுள்ளனர். அங்ஙனம் வேண்டியவற்றுள் மழையும் ஒன்று.

இம்மழையைப் பெய்யாத பொழுது வேண்டியவர்கள் அல்லர் நிம்முன்னோர்கள். மழை நன்கு பெய்து வருகின்ற பொழுதே இந்நிலை ஆண்டுதோறும் பொய்யாது பெய்தல் வேண்டும் என வேண்டினர். இது பற்றிய சில குறிப்புக்களை ஈண்டு நினைவு கூர்வோம்.

திருவள்ளுவனார் உலகம் உய்ய எழுந்தருளிய அருள் முதல்வர். அப்பெருமான் கடவுள் வாழ்த்தினை அடுத்து வான் சிறப்பினை எடுத்துப் பேசுகின்றார். கடவுள் வாழ்த்தினை அடுத்து வான்சிறப்பினைப் பேசக் காரணம் உயிர்கள் தம் முதல்வனாய கடவுளை அடையவும், அக்கடவுளது ஆணையாலன்றி மனித ஆற்றலாற் பெறத் தகாதது மழை என்றறியவுமேயாகும். மழை வேண்டின் இறைவனது கருணை மழை வேண்டும் என்பதே அவர் தம் திருக்குறிப்பாகும். இதனால் தான் பண்டைக் காலத்து மக்கள் தம் சிறுமியரை அழைத்து விடியற் காலையில் நீராடச் செய்து மழை வேண்டி இறைவனை வேண்டுமாறு செய்தனர். இக்குறிப்புப் பரிபாடல் என்னும் நூலிலிருந்து நன்கறியப்படுகிறது. இறைவன் ஒருவனே மழை தருதற்கு உரிமையும் தகுதியும் உடையவன். அவனை இடையறாது வேண்டுவதன் மூலமே இக்குறையை நிறைவு செய்ய முடியும் என்ற உண்மையை நம் முன்னோர்கள் நன்கறிந்திருந்தனர். இறைவனிடம் என்றும் எதற்கும் குறையில்லை. நாம் வேண்டாத குறையே குறை. அவன் கருத்தறிந்து முடிப்பவனே எனினும் நமது முயற்சியும் சிறிதேனும் வேண்டுமன்றோ! முயற்சியின்றிக் கிடக்கும் பொருள் எத்துணைப் பெரிதெனினும் அரிதெனினும் அதன் இன்றியமையாமை நமக்கு விளங்காது. எனவே நமது முயற்சியும் சிறிதேனும் வேண்டும். அம்முயற்சி இறைவனை நல்லுணர்வோடு நினைந்து வழிபடுதலேயாகும்.

"கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானை" என்று கூறுகின்றார் சுந்தரர் பெருமான். வானம் பொழிவது இறைவியின் அருட் செயலோடு ஒத்தது என்று கூறுகின்றார் மணிவாசகர். முருகப் பெருமானின் திருக்கரங்களில் ஒரு கரம் மழை பெய்வதற்கென்றே அருள் சுரந்து நிற்கின்றது என்று கூறுகிறார் நக்கீரர். "நீள்நிற விசும்பில் மலிதுளி பொழிய ஒரு கை" என்பது அவர் தம் திருவாக்கு. "ஓவாது மாரிபொழியும் மலர்க் கரமும்" என்பது குமரகுருபர அடிகளின் திருவாக்கு. இங்ஙனம் மழையாகவும் மழை பொழியக் காரணமாகவும் இருக்கும் அருள் முதல்வனை வணங்கி வழிபடுதல் இச்சூழலில் நமக்கு இன்றியமையாத முதற் கடமையாகும்.

இனி மழை பொழிவதற்கு மக்களின் பண்பாடும் இன்றியமையாதது என்பது நம் முன்னோர்களின் கருத்து ஆகும். அரசனின் செங்கோற் சிறப்பினால்தான் அறிவான் அமைந்த சான்றோர்கள் நிறைந்து விளங்குவார்கள். அவர்களால் மழை நன்கு பொழியும் என்பது புறநானூற்றிலிருந்து அறியப்பெறும் உண்மையாகும்.

"கோல் செம்மையின் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப்பு அறியா புன்புலத் ததுவே"

என்பது அப்பாடற் பகுதி. எனவே அரசியலறம் நன்கு இருத்தலும் அதனால் சான்றோர் பல்குதலும் அவற்றால் மழை நன்கு பொழிதலும் ஒன்றற்கொன்று காரணமாய் விளங்கி நிற்கும் என்பது சான்றோர் கருத்தாகும். அதனாற்றான்,

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிபின மாரிவறம் கூரும்" — *மணிமேகலை.*

என்றும்,

"[illegible] பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற[illegible] செயற்கையில் தோன்றினும்
காவல[illegible] இக்கண்ணகல் ஞாலம்" — *புறநானூறு.*

என்றும் கூறினர் சான்றோர்.

இனிப் பெண்கள் கற்புநெறி வழாது இருத்தலும் மழை வளம் கெடாது இருத்தற்குக் காரணம் என்பர். கற்பிற்கு ஆற்றல் பல இருப்பினும் மழை தரும் ஆற்றலே பெரிது எனக் கருதினர். "வான் தரு கற்பினுள்" "பெருமழை தரவேண்டிற் றரு கிற்கும் பெருமையளே" என்றெல்லாம் கலித்தொகை கூறுகின்றது. "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்பது திருக்குறள். "மழைக் குதவு பெருங் கற்பு" எனக் குறிப்பர் சேக்கிழார்.

"வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"

என்று கூறுவர் சீத்தலைச் சாத்தனுர். ஆனுல் இவரே பிறிதோரிடத்து இப்பத்தினிப் பெண்டிரின் கற்புச் சிறத்தற்கும் நல்ல அரசியலமைதி வேண்டும் என்று கூறுகின்றுர்.

"அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது"

என்பது அவர்தம் கூற்று. எனவே அரசியல் நன்கு இருந்தால் தான் சான்றேரும், பத்தினிப் பெண்டிர்களும் நன்கு வாழ முடியும். இவ்விருவர்தம் நல்வாழ்வால் நாட்டில் நல்ல மழையும் பொழியும்.

எனவே நல்ல அரசியலும் அறிவு ஒழுக்கங்களால் நிறைந்த சான்றேர்களும் பத்தினிப் பெண்டிர்களும் நிறைந்த நல்ல சமுதாயமும், சமுதாயத்தில் உண்மை உணர்வோடு கூடிய தெய்வ வழிபாடும் உளவாயின் வான்முகில் வழாது பெய்யும் என்பது நம்முன்னேர்களின் கருத்தாகும்.

மழை வேண்டுங்கால் பெய்யாது இருப்பது எத்துணைத் தீங்கோ அத்துணைத் தீங்கு பெய்ய வேண்டாத போழ்து பெய்வதும் ஆகும். ஆதலால்தான் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் வான்முகில் பெய்க என்று கூருது வழாது பெய்க என்றும் கூறினர். இம்மழையின்றேல் ஓரறிவுடைய புல்லும் இல்லை; புல்லும் இல்லாது ஒழியக் கால்நடைகளும் இல்லை; கால்நடைகள் இன்ருக ஏரும் இல்லை; ஏரின்ருக விளைவும் இல்லை; விளைவின்ருக

உணவும் இல்லை; உணவின்றாக ஒழுக்கமும் இல்லை; ஒழுக்கம் இன்றாகச் சான்றோர்களும் பத்தினிப் பெண்டிர்களும் இல்லை; இவர்கள் இலராக அரசியலும் இல்லை. சுருங்கக் கூறின் வாழ்வே இல்லை. இவையெல்லாம் இல்வாழ்வில் நின்றவர் களுக்கே யன்றோ? துறவியர்களுக்கு என்னையெனின் அவர் களும் நாளும் நீராடவும் இறைவனுக்குத் திருமஞ்சன மாட்டி மலரிட்டு வழிபடவும் இம்மழையே வேண்டும். அதனால்தான் திருவள்ளுவனாரும்,

"தானம் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்"

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

என்று கூறினர். இக்கருத்தினை வைத்தே சேக்கிழாரும் "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரத்தில் "வீழ்க தண்புனல்" என்ற தொடருக்கு விளக்கம் கூறுங்கால் "வேள்வி நற்பயன் வீழ்புனலாவது நாளும் அர்ச்சனை நல்லுறுப்பு ஆதலால்" என்று விளக்கினர்.

மழையின்றேல் உயிர்க்கு வரும் தீங்கைத் திருவள்ளுவர் கூறியதைச் சேக்கிழார் இரண்டடிகளில் தொகுத்து விளக்கித் இத்தீங்கும் திருநீற்றுச் சார்பினோர்க்கு வாராது எனக் கூறு கின்றார். அவ்வருமையான திருப்பாடல் பன்முறையும் நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. திருவீழிமிழலையில் திருஞானசம் பந்தரும், திருநாவுக்கரசரும் எழுந்தருளியிருக்கும் பொழுது, அங்கு பஞ்சம் வர, அதுபோழ்து அவ்விருவரும் இறைவனை வேண்ட, இறைவனும் இருவர்க்கும் ஒவ்வொரு படிக்காசு அருளிப் பஞ்சம் நீங்கப் பேரருள் செய்தனன் என்பது வரலாறு. அவ் விடத்துப் பஞ்சம் வருதற்குக் காரணம் மழையின்மையே எனக் கூறவந்த சேக்கிழார், மழையின்மையால் வருந்தீங்கைத் தொகுத்துத் தருகின்றார். அப்பாடல் வருமாறு :—

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி உணவு மாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூசை யாற்றா
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு

பண்ணமரும் மொழியுமையாள் முலையின் ஞானப்
பாலறுவாயருடன் அரசும் பார்மேல்
கண்ணுதலான் திருநீற்றுச் சார்பி னோர்க்கும்
கவலை வருமோ என்றுகருத்திற் கொண்டார்

இப்பாடலில் "மண்ணின் மிசை வான் பொய்த்து" என்ற தொடர் "விண்ணின்று பொய்ப்பின்" என்னும் திருக்குறளையும் "நதிகள் தப்பி" என்னும் தொடர் "நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும்" என்னும் திருக்குறளையும் "மன்னுயிர்கள் கண் சாம்பி" என்னும் தொடர் "விசும்பிற்றுளிவீழினல்லால்" என்னும் திருக்குறளையும் "உணவு மாறி" என்னும் தொடர் "ஏரின் உழார்" என்னும் திருக்குறளையும் "விண்ணவர்க்கும் சிறப்பில் வரும் பூசையாற்ற" என்னும் தொடர் "சிறப்பொடு பூசனை" என்னும் திருக்குறளையும், "மிக்க பெரும்பசி உலகில் விரவக் கண்டு" என்னும் தொடர் "விண்ணின்று பொய்ப்பின்" என்னும் திருக்குறளையும் உட்கொண்டு விளங்குதல் காண்க.

கண்ணுதலான் திருநீற்றுச் சார்பினோராய நாமும்,

"வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவ வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

என வாழ்த்தி, கார்க்குன்ற மழையாய்ப் பொழியும் கருணை வள்ளலை வணங்கி, வான்முகில் வழாது பெய்ய வேண்டுவோமாக!

"முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்

அற்புதத் திருப்பதிகங்கள்

Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

The news of this miracle spread far and wide. At Kodungolur cheraman Perumal was immensely happy and celebrated this occasion. St. Sundarar reached the chera capital and the king himself held the umbrella for the saint and welcomed him. The two saints lived happily there for some time.

One day Sundaramurti Nayanar visited the Tiruvanjaikkalam temple and there St. Sundarar expressed his desire to go back to Kailasa and live with his Lord. His wish was granted and the Great Siva sent a white elephant and His messengers to bring St. Sundarar. The saint mounted the elephant and it leapt up the air. Cheraman Perumal arrived there just then and, finding that the saint was leaving on an elephant uttered the sacred panchakshara in the ear of a horse standing nearby and seating himself upon it flew in the air. The horse went round the elephant and shot ahead.

St. Sundarar riding the elephant remembered the greatness of the Grace and there poured forth a padigam.

திருநொடித்தான் மலை. பண்: பஞ்சமம்.

" தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே".

"My Lord, the Magnificent, of the Himalayas, created me; Knowing that, I sang in praise of His Holy Feet, was it poetry? But He appreciated me and the poems and through His Grace gave me an elephant to ride upon, and sent the celestials along with it to receive me; He separated my soul from this earthly body".

St. Cheraman was stopped at the gate and St. Sundarar entered the presence of the Lord of Kailasa and prayed for the entry of Cheraman Perumal. And he was allowed.

Both of them enjoyed the Bliss of the Presence of Lord Siva at Kailasa since then.

Paravaiyar and Sangiliyar, in due course, reached Kailasa and began serving Parvati as Her maids with their original names, Kamalini and Aninditai.

(To be continued)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

நீத்தல் விண்ணப்பம்

இனி நீத்தல் விண்ணப்பம் திருவுத்தர கோசமங்கையில் கட்டளைக் கலித்துறையாகத் துதித்தது. அநாதி முதல் ஆன்மாவைத் திருவருள் கலந்து உள்ளிருந்து இரட்சித்த திருவருள் வினியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன :—

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்[1]விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பிரா னென்னைத் தாங்கிக்கொள்ளே.

(இ - ள்). யாவர்க்கும் கீழான கடையனும் அறிவிலாதவனுமான என்னை எவற்றினுக்கு மேலான பெருங்கருணையாற் கலந்த பின் பிரிவில்லாத அநாதியே அடியேனை அடிமைப் பணிகொண்ட எருதேறும் எங்கள் பரமனே! அறிவிலாதவனெனத் திருவுளமறிந்தும் அடியேனைப் பராமுகங் கொள்வது கருணையோ? புலித் தோலுடையாகத் தரித்தோய்! அநாதியாயுள்ள திருவுத்தரகோச மங்கைக்கரசே! திருச்சடையோய்! அடியேன் பிறந்திளைத்தேன்! ஆன்மநாயகனே! அடியேனைக் கீழ்விடாது பாதுகாக்கவென அருளிய அன்புத் தொடர்ச்சியான இன்பத்தைக் காண்க.

---

[1] *விட்டிடுதி கண்டாய் என்றதற்கு, 'அடியேனைப் பராமுகம் கொள்வது கருணையோ' என்பது இவ்வுரை. இவ்வாறு வினாப் பொருளிலன்றி என்னை விட்டு விடுகின்றாய், 'என்னைப் பாசத்தினின்று நீக்கி அருள்க என்றும்' கூறுவாரும் உளர்.*

---

* *இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும். 20% கழிவு உண்டு.*

தோடுடைய செவியன்

திரு. இரா. கா, மாணிக்கம், எம். ஏ., அவர்கள்,
பூ. சா. கோ. கலைக்கலலூரி, கோவை.-14

கழுமலக் கோவில் குளத்தங்கரையிலே ஒரு குழவி வாயெல்லாம் பாலொழுக நிற்கின்றது. குளித்துவிட்டு வந்த தந்தையார் பூாலூட்டினுர்கள் எனத் தெருட்ட, அக்குழவி ஆள் காட்டி விரலை நீட்டி ஆண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தோணியப்பரைச் சுட்டிப்பாடுகின்றது.

"தோடுடைய செவியன், விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி என்உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே"

குழவி பாடுமா? அம்மையால் ஞானப்பாலூட்டப்பட்ட திருக்குழவி யன்ருே ஞானசம்பந்தப் பெருமான்? பாடுவதற் கென்ன? அம்மையின் அருளைப்பெற்று அவர் குழவியான வரன்ருே கழுமல வேந்தர்? அவரது பாடல்களில் தெய்வ மணமும் சிறப்பும் இல்லாமலிருக்குமா?

ஞானசம்பந்தரது திருவாய் அருளிய தேவாரங்களே திருமுறையில் முதலிடம் பெறுகின்றன. பன்னிரு திருமுறை களுக்கும், முடிமணியாய், உயிர் நாடியாய் அவை இலங்கு கின்றன. அந்தச் சிறப்பிற்குக் காரணம் என்ன? அப்பனருள் பெற்ற நாவரசரினும் அம்மையருள் பெற்ற ஞானசம்பந்தருக்குச் சிறப்புக் கொடுக்கவா? இல்லை ஆண்டவனின் செல்லக் குழந்தை என்பதாலா? இல்லை அப்பரே குழவிக்குச் சிவிகை தாங்கிய தாலா? என்னவாக இருந்தால்தான் என்ன? சைவத் திருமுறை களின் முதற்பாட்டு என்ற சிறப்பு இப்பாட்டிற்கு உண்டன்ருே? அச்சிறப்பினில் குறையா வண்ணம் இப்பாடல் அமைந்திருக்கும் நயந்தான் என்னே! அழகுதான் என்னே!

பாடியவர் கழுமல வேந்தரன்றே? அதுவும் அம்மை அருளிய ஞானப்பாலினை மறந்து பாடுவாரா? இல்லை, தன்னுடைய அம்மையையும், அப்பனையுந்தான் அவரால் மறக்க இயலுமா? எனவே தான் எடுத்த எடுப்பிலேயே அவர் "தோடுடைய செவியன்" என்கிறார். அம்மையருள் பெற்றவராதலினாலே அம்மையை முற்கூறினார். இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கும் பிராட்டியினது செவிக்கண் உள்ள தோட்டினைக் கூறுகின்றார். அர்த்தநாரிசுவரராகப் பெருமான் இருக்கும் கோலத்தையும், அம்மையையும் முன்வைத்துத் "தோடுடையசெவியன்" என்றன்றே ஏத்துகின்றார்!

அழுதகுரல், அப்பனினும் அம்மைக்கு முன்னர்க் கேட்டிருக்குமோ? எனவேதான் அம்மை பாலூட்டினாரோ? அந்த அழுகைக் குரலைக் கேட்டதற்குக் காரணமாய செவியை ஏத்துவார் "தோடுடைய செவியன்" என்கின்றார். என்னே பாடலின் பெருமை!

அடுத்து அம்மையும்,அப்பனும் இடபவாகனராய் இருக்கும் காட்சியின் பெருமையினை "விடையேறி" எனச் செப்புகின்றார்.

நாடி வந்தவரைத் தேடிக் காக்கும் பெருமைகொண்டது சரணாகதம். எனவேதான் ஆண்டவனைச் சரணம் என்று வந்த மறுவுள்ள மதிகூட அவன் தலையில் ஏறினமையாலே நற்சிறப்புப் பெறுகின்றது. ஆண்டவனைச் சார்ந்தவை, தூய்மையும், சிறப்பும் பெறுவதில் புதுமையுளதோ? எனவேதான் குறையிருக்கும் மதிகூட, நிறையுடையதாக ஆக்கப் பெற்றுத் தூவெண் மதியாகின்றது.

புறத்தோற்ற அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்து, அதுவே அழகு என்று மாயையை நாம் நம்புகின்றோம். ஆனால் உண்மையான ஆன்மாக்களுக்குப் புறஅழகு அழகாகத் தோன்றுமா? அக அழகன்றோ தேவை. சாம்பலைப் பூசிய திருமேனியினைக் கொண்ட சுடலையாடி ஞானசம்பந்தருக்கு உள்ளங் கவர் கள்வனாக அன்றோ இருக்கின்றார்? ஐயையோ? சுடலையாடியின் கோயிலோ சுடுகாடு; கொல்புலித்தோல் அவனுக்கு நல்லாடை;

அவனுக்கு தாய் தந்தையர் உளரோ? இல்லையே! அவன் தாயுமிலி; தனியன் எப்படிக் குடும்பம் நடத்துவது? இத்தகைய ஆளா ஞானசம்பந்தருடைய உள்ளங்கவர் கள்வனுகின்ருர்? ஆம்! புறத் தோற்றமாயையில் உழலும் நமக்கு இது புரியாது. உலகோடு, சார்ந்ததன் வண்ணமாயுள்ள ஆன்மாக்களுக்கு இது தெரிய நியாயமில்லைதான்! ஆனல் மாயை நீங்கிய, பக்குவப் பட்ட ஆன்மாவுக்கு இத்தோற்றங் கொண்டவனே "உள்ளங் கவர் கள்வனுக" இருக்கின்ருன். இதுதான் உண்மையழகு; அந்த அழகை அம்மையின் திருக்குமரன் கண்டு விட்டதில் புதுமை யுண்டோ?

அடுத்தது அவன் எழுந்தருளியிருக்கும் இடத்தின் பெருமை. தான் பிறந்த இடமும், தனக்கு ஞானப்பால் கிடைத்த இடமும் அதுவாகையினுல் தான், அதற்கு இரண்டு அடிகளைச் செலவிடுகின்ருரோ? பிரமன் வழிபட்டதுதான் அதற்குப் பெருமையா? இல்லையே! எத்துணையோ பேர் வழிபடுகின்ருர்கள். எத்துணையோ பேர் அருள் பெறுகின்ருர்கள். இதில் என்ன பெருமையுள்ளது? பிரமன் வழிபட்டதால் அதற்குப் பிரமாபுரம் என்ற பெயர் வந்தது. ஆனுல் பீடு எப்படி வந்தது?

ஞானசம்பந்தர் தன் ஊர் என்பதற்காகப் பீடுடைய பிரமாபுரம் எனச் சொல்லி விட்டாரா? அப்படியானுல் அவருக்கும் பற்று ஏற்பட்டு விட்டதா? பற்றற்ருன் பற்றினைப் பற்றிய அவர் பற்றற்றவராகவன்ருே இருக்க வேண்டும்? அப்படித்தான் இருக்கின்ருர். பின் ஏன் "பீடுடைய" என்ற சொல்லைப் பெய்தார்? காரணமில்லாமலா? இல்லை. அப்படியானுல் என்ன காரணம்?

உலகெலாம் ஊழியின் சீற்றத்திலே மூழ்கிய நேரத்தில் இத் தோணிபுரம் மட்டும் மூழ்காமல் இருந்ததாம். அம்மையும், அப்பனும் தோணியில் வீற்றிருந்தபடி இருந்தனராம். எனவேதான் கழுமலத்திற்குத் தோணிபுரம் என்ற பெயரும் உண்டாயிற்று. தோணியில் மிதந்தமை காரணமாக அவரும் தோணியப்பர் ஆனுர். இத்தகைய அழியாச் சிறப்புக் கொண்டமையினுலே அது "பீடுடைய" ஊராயிற்று.

இந்தச் சிறப்புக்களையெல்லாம் உள்ளடக்கிய பாட்டு இது. முற்கூறிய வண்ணம் சைவத் திருமுறைகளுக்குத் தொடக்கமாயுள்ள இப்பாடலே இத்துணை நயமும், தெய்வ மணமும் கொண்டதாக இருக்குமாயின் ஏனையவற்றைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமல்லவா?

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைததாள், சுந்தரமூர்ததி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கலலெழுததுக் குறிப்புக்கள ஆகியவை, அடஙகியது, தனிப்பிரதி அடகக விலை ரூ. 1-30.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுககுமேல் வாங்குவோர்க்கு 20% கழிவு.

(தபால செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:-

1. **T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,**
நிரநதரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி மாவட்டம்.)

2. **திரு. க. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், B. A.,**
தியாகராச விலாசம, 53, பிள்ளையார் கோவில் தெரு,
இருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

உ

சிவ சிவ

The Rajah of Ramnad Memorial Feeding Charity at Varanasi (Second Additional Endowment) Rs. 52,000/-

This endowment is founded by His Holiness **Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal** avergal of Sri Kasimutt, Tirupanandal in memory of Srimath Bavani Sankararama Raja Sethupathi Kaththa Ragunatha Thevar Avl., Raja of Ramnad who in the Salivahana Year 1646 (27th Ani, Keelaka) made free gift of the entire village of Thalirmarungur in Tiruvadanai Taluk of Ramnad District and executed a copper plate in favour of our revered Predecessor-in-Title Srilasri Kasivasi Thillainayaga Tambiran Swamigal for conducting daily feeding charity at Banaras.

As the Government took over the village under the Estates Abolition Act of 1948 and reduced the Rents under the Rent Redutction Act of 1947, we founded an endowment (No. 223 வாரணாசியில் சேதுகாவலர் நினைவு அன்னம்பாலிப்பு) on 27—10—1956 for Rs. 5000/- with the interim Compensation received in October 1956 for the daily feeding of Brahmins and Saivites in our Mutt at Banaras.

The Government have then sanctioned Rs. 33034-29 under the Rent Reduction Act 1947 in G. O. MS. 1761 dated 26—4—1957 and with that amount an additional endowment (No. 243) was made in memory of the said Rajah of Ramnad for

Rs. 40,000/- for conducting daily feeding Charity (Brahmin feeding Maheswara Pooja and Poor feeding) at Banaras.

The Government have now sanctioned Rs. 1,01,594-43 under the Madras Estates (Abolition & Conversion into Ryotwari) Act 1948 - Under Section 38 (i) and 38 (ii) and deficiency to be made good to the institution under section 54 (2) in G. O. communicated in Collector's letter Roc. Z. 2. 12729/65 dated 23—2—1965 cited in Roc. A. 5.5400/65 dated 24—5—1965 and 7—6—1965 of the Tahsildar, of Tiruvadanai and out of this amount a sum of Rs. 25,000/- is now utlised to make a **second additional endowment** in memory of the above said Raja of Ramnad for conducting daily feeding charity (Brahmin feeding & Maheswara Pooja) with the interest derived from the capital in our Kumaraswami Mutt at Banaras in addition to the other feeding charities conducted according to the other endowments already made. The endowment shall be called **"The Raja of Ramnad memorial feeding charity at Varanasi-Second Additional Endowment."**

2. The Capital of this endoment is Rs. 52,000/- and it is invested as Fixed Deposit for five years in the State Bank of India, Kumbakonam fetching interst @ 7% per annum. Fixed Deposit Receipt No. A. 427293 dated 31—8—1965 for 60 months. The administration of the fund shall vest in us and our successors in interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for conducting daily feeding charity (Brahmin feeding and Maheswara Pooja) in our Mutt at Banaras (Varanasi) in addition to the other feeding charities founded by us.

4. The feeding shall be conducted according to the Thitta Japtha (Budget) prepared by us and our successors in interest which will depend upon the interest accrued and the prices of commodities.

5. The endowment will not be diverted to any purpose other than the one mentioned above. The capital may from time to time be invested in Government Securities or Fixed Deposit fetching high rate of interest. The capital shall always stand in our name and our successors in interest.

Tirupanandal
Dated 8-10-1965. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 12-10-1965 as No. 50 of 1965 of Book 4 volume 53 Pages 49 to52.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு.

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ.1-50,
ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.
(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
10927	சிவஞானப் போதச் சிற்றுரைத் தெளிவு	திருவாவடுதுறை ஆதீனம்
10928	தமிழ்பா மஞ்சரி	கி. வா. ஜகந்நாதன்
10929	திருபுவனம் ஸ்ரீகம்பஹரேஷ்வர சுவாமி தேவஸ்தானம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா மலர்	இந்து அறநிலைய அமைச்சர், சென்னை
10930	கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
10931 to 33	Hymns and Proverbs	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்
10934 to 38	திருத்தொண்டர் புராணச் சாரம் (மூலமும் கதைச் சுருக்கமும்)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்
10939	LES DUHA DE DHOLA – MARU	Par Charlotte Vaudeville
10940	Gaya Mahatmya – Par	Claude Jacques, Pondicherry
10941 to 46	ஓங்கார விளக்கம் (நானூறு வேதப் பிரமாணங்களுடன்) 1920	ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியார், சோளங்கிபுரம்
10947 & 48	திருத்தொண்டர் புராணமூலம்	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்

10949	Lady Doak College Magazine	Madurai
10950 – 51	கன்னியாகுமரி அம்மன் துதிப்பாடல்கள்	சைவப்புலவர் பண்டித. அ. சிவ. சுப்பிரமணிய பிள்ளை, வடிவீஸ்வரம், நாகர்கோவில்
10952 – 53	தருமபுரத் தமிழ்பா மலர்	N. S. சிதம்பரம்
10954	தினசரி தியானம்	ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்
10955	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்	கழக வெளியீடு
10956	திருக்குவளை தலவரலாறும் தோத்திரங்களும்	தருமையாதீனம்
10957	The development of saivism in South India	,,
10958	திருவருட்டுறைப் புராணம்	,,
10959	கந்தபுராணச் சுருக்கம்	,,
10960	பாப்பம்மாள் அறநிலயம் 1963 – 64-ம் ஆண்டு அறநிலைய மாணவர் மன்ற அறிக்கைகள்	பாப்பம்மாள் அறநிலயம், கீழச் சிந்தாமணி திருச்சி
10961	காமாட்சியம்மன் விருத்தம்	கணபதி வாசகசாலை, 92 காமாட்சியம்மன் கோவில் தெரு, காஞ்சீபுரம்
10962	சிதம்பரம் ஸ்ரீ சிவகாமி அந்தாதி	ஆக்கூர் ச. பாலசந்திர முதலியார்
10963	திருச்செங்கோடு ஸ்ரீ செங்கோட்டு வேலவர் திருப்பள்ளியெழுச்சி	வேலூர் ஸ்ரீகுமரன் அச்சக வெளியீடு
10964	Sree Skanda Shashti celebrations Souvenior **1963**	Sri Swaminatha swami seva samaj Regd. New Delhi
10965	Pandit Jawaharlal Nehru Jayanthi Malar	Sarvakala Bhooshnam La. Sa. Subramaniam, Journalist

10966	Presidential Speech by V. V. Giri at the function of releasing Sri Jawaharlal Nehru Jayanthi Malar at Madras.	
10967	திருவாமூர் மகா கும்பாபிஷேக மலர்	திருவாமூர் கும்பாபிஷேக குழுவினர்
10968 to 72	The development of Saivism in South India	Dharmapuram Adeenam
10973 to 75	திருவெண்ணெய்நல்லூர் தலபுராணமாகிய திருவருட்டுறைப் புராணம்	தருமையாதீனம்
10976 to 78	திருக்குவளை தலவரலாறும் தோத்திரங்களும்	ஷை
10979 & 80	கந்தபுராண சுருக்கம்	ஷை
10981	Hymns of Thiru Arutpa (Jothi Ramalingam) Tamil with English Translation.	P. Mutharasu, M. A , B. T., Sri K. G. S. Arts College, Srivaikuntam.
10982 to 86	மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகமும், திருக்கோவையார் செய்யுட்டிரட்டும்	ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியாரவர்களால் பாசுரங்களின் தளைகள் பிரித்துப் பரிசோதிக்கப்பட்டு ஷை உரையும் ஆசனமும் இயற்றப்பட்டது.
10987	திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி	ஸ்ரீ காசிமடம்
10988	Hymns of Thiruvarutpa	P. Mutharasu, M. A., B. T., Sri K. G. S. Arts College, Srivaikuntam.
10989	காவடிச்சிந்து	கு. அழகிரிசாமி, சக்தி வெளியீடு
10990	விவேகானந்த விஜயம்	சுவாமி ருத்ராநந்தா
10991	சமயக் கட்டுரைகள்	பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை

10992 & 93	திருவாசகம் – சிவபுராணம்	திரு சோமசுந்தரம் செட்டியார்
10994	Tamil Mysticism	Professor K. R. R. Sastri
10995	பண்டார சாத்திரம்	திருவாவடுதுறை ஆதீனம்
10996	திருச்சாய்க்காடு கோயில் வரலாறு	வில்லேந்திய வேலன், சாயாவனம்
10997	Sree Skanda Shasti celebrations	Sri Swaminatha swami Sevasamaj New Delhi
10998	திரு. இரத்தினவதி யென்னும் அலர்மேலம்மையார் அவர்தம் செல்வமகன் சண்முகன் நினைவு மலர்	வித்துவான் திரு. பு. ப. மாசிலாமணி முதலியார்
10999	The School and the Centenary	T. S. Avinashilingam
11000 & 11001	திருவிசைப்பா திருப்பல்லாண்டு தெளிவுரை	ஸ்ரீ குமரகுருபரன் சங்கம் பன்னிருதிருமுறை வெளியீடு, ஸ்ரீவைகுண்டம்
11002	Truth Ancient and modern	Veerabahu Maharajan
11003	சன்மார்க்கம் – உண்மை விளக்கம்	டாக்டர். வீ. மகராச பிள்ளை L. M P.
11004	திருக்கழுமல மும்மணிக்கோவை (மொழிப்புரையுடன்)	திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்
11005	திருவேகம்பமுடையார் திருவந்தாதி	ஷை
11006	General knowledge current Affairs interviews and who's who	O. P. Varma, Editor, "Oreers Digest"
11007	திருமந்திரக் கட்டுரை அட்டமாசித்தி (பரகாய பிரவேசம்)	திருவாவடுதுறை ஆதீனம்

11008	திருமந்திரம் ஆறும் தந்திரம் பஞ்சாக்ஷர தீபம் என்னும் உரையுடன்	திருவாவடுதுறை ஆதீனம்
11009	திருமந்திர மாநாட்டு மலர் 1965 ஜனவரி	ஷை
11010	ஞானகுருமலர்	மதுரை B. C. புஷ்பவல்லி தாயார் என்பவர் மூலம் வரவு
11011	யோகானந்	,,
11011	ஸ்ரீ லலிதா	,,
11013	ஷை	,,
11014 to 17	Sri Sudha	,,
11018	Swami Sivananda's 76th Birth day souvenir	,,
11019 to 23	தர்மசக்கரம்	,,
11024 to 36	ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்	,,
11037	குமரகுருபரன் 1964-ம் ஆண்டு (பைண்டிங் செய்தது)	,,
11038	சிவஞானசித்தியார் சுபக்கம்	திருவாவடுதுறை ஆதீனம்
11039	அசல் மருத்துவக்குடி வாக்கிய பஞ்சாங்கம் 1965–66	விசுவாவசு G. S. வெங்கிட்டராமய்யர் கும்பகோணம்
11040 to 44	திருவாசகம் முதற் பகுதி மூலம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் திருப்பனந்தாள் மடம் எண்டோமெண்டு பப்ளிகேஷன்	அண்ணமலை பல்கலைக் கழகம் வெளியீடு
11045	விசுவாவசு வருஷ பஞ்சாங்கம்	தருமபுரம்

11046 to 77	திருக்குறள் மூலம்	திருக்குறள் அறநிலையம், மதருஸ்
11078 to 87	ஆறுநீதி நூல்கள்	ஸ்ரீ காசிமடம் இலவச வெளியீடு
11088 to 91	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திர வரலாற்றுப் படங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப் படங்களும்	திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம்
11092 & 93	சந்தானுசாரியர் புராணம்	தருமையாதீனம்
11094	சிவசைலத் தலச்சிறப்பு & கடையம் திருவாசுகிரி, முருகன் துதி	வா. இராமலிங்கம் பிள்ளை, ஆழ்வார்குறிச்சி
11095	Na Tirukurala – Thiruk kural	Sri Ramakrishna Mission, Nadi, Fiji.
11096 & 97	திருவிளையாடற் புராணம் – உரைநடை	P. மகாதேவ அய்யர் 'அமரபதி' திருவான்மியூர் மதருஸ்.
11098 & 99	துரியவெளி	துரியானந்தர், ஞானம் பதிப்பகம், 1. ராமானுஜம் செட்டி தெரு, சென்னை-14
11100	திருவிடைமருதூர் தலபுராண வரலாற்று சுருக்கம்	திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானம்
11101	மருதவனபுராணம்	ஷை
11102	குளத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி	திருவாவடுதுறை ஆதீனம்
11103	சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்	ஷை
11104	கோயிற்புராணம், பொழிப்புரையுடன்	ஷை
11105	பண்டாரசாத்திரம்	ஷை
11106	The Journal of the Tanjore Maharaja Sorafoji's Sarasvati Mahal Library	T. M. S. S. Library, Tanjore

11107	சைவம்	தருமை ஆதீனம்
11108	இலக்கணத்திற் கற்பனைகள்	த. ரா. முருகவேள், M. A., M. O. L.,
11109	Lumumba Friendship University The first Convocation	Soviet Revie
11110	திருக்கோவையார் உண்மை விளக்கம்	திருவாவடுதுறை ஆதீனம்
11111	Quru Tattwa - by Swami Sivananda	The Yoga Vedanta first The Divine Life academy Society
11112	Unity of Religions By Swami Sivananda	Do.
11113	Mutt and temples	Dharmapuram Adeenam
11114	The Life of St. Ramalingar	Published by Sanmarga Sangam by P. Mutharasu M. A., B. T.,
11115	கந்தபுராணம் சுருக்கம்	வித்துவான், சி. பட்டுசாமி ஓதுவார்
11116	வள்ளுவர் வாசகம்	கல்கி வெளியீடு
11117	நில உச்சவரம்பு மசோதா சட்டமானால்?	உடுமலைபேட்டை பா. அரங்கநாதன்
11118	எல். டி. சாமிக்கண்ணு பிள்ளை (ஒரு விளக்கம்)	கு. அருணசலக் கவுண்டர்
11119	கன்யாகுமரி	வித்துவான் திரு. சு. உமைதாணுப் பிள்ளை
11120	விநாயகர் கவசம்	திருநெல்வேலி சைவ சித்தாந்தக் கழகம்
11121	சமயக்குரவரும் சந்தானக்குரவரும்	தருமையாதீனம்
11122	திருச்செந்தூர் வள்ளிநாயகி பிள்ளைத் தமிழ்	திருச்செந்தூர் தேவஸ்தான வெளியீடு
11123	ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ்	திருவாவடுதுறை ஆதீனம்

11124	சிவஞான போதம்	தருமையாதீனம்
11125	ஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் மாலை (குறிப்புரையும்)	திருவாவடுதுறை ஆதீனம்
11126 & 27	இந்துமறு ஜனனமறுப்பு	திரு. கி. அ. வேதரத்னம், தூத்துக்குடி
11128 & 29	தாய்ச்செல்வம்	நெல்லை, அருணகிரி இசைக் கழகம்
11130 & 31	அறப்பயிற்சி மாலை (முதற் புத்தகம்)	சைவ சித்தாந்த மகா சமாஜம்
11132 & 33	திருமந்திரக் கட்டுரை (முற்பகுதி)	திருவாவடுதுறை ஆதீனம்
11134 & 35	சிவப்பிரகாசம் சீர்மை கட்டுரை முதற் பகுதி	,, ,,
11136 to 39	அப்பர் சுவாமிகள் அற்புத விளக்கம்	தருமையாதீனம்
11140	சிவஞானபோதம்	,,
11141 & 42	சித்தாந்த நூல் திரட்டு	,,
11143 & 44	கங்கைகொண்டான் சோழபுரம்	தேவஸ்தான வெளியீடு
11145	ஐந்தாம் திருமுறை திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள்	
11146	இராஜராஜேச்சுரரும் பிற சோழ கோவில்களும்	தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பட்டது
11147	திருக்கோவையார்	Madras Govt. Oriental Servies by T. Chandra Sekaran M. A, L. T.,
11148	இரக்ஷணிய சமய நிர்ணயம்	H. A. கிருஷ்ண பிள்ளை
11149	Sivagnana Bodham	Thiruvilankar Canagarayar
11150	வடஇந்தியாவும் திருக்கைலாயமும்	முருகன் பிரதர்ஸ்
11151	சிவஞானசித்தியார்	

(தொடரும்)